Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY
TIRUVANMIYUR, MADRAS-41

# TAMIL ESSAYS.

BY

T. Chelvakesavaroya Mudaliar, M.A.,
*Pachaiyappa's College.*

Madras:
S. P. C. K. PRESS, VEPERY.

1907.

# கல்வி.

# கல்வி.

பக்கம்.

1. கல்வி—வித்தை—சாஸ்திரம் .... .... .... .... 5
2. நூல் .... .... .... .... .... .... .... 6
3. ஆசிரியன்—மாணாக்கன்—பாடசாலை—பாடம் .... .... ,,
4. பாலசிக்ஷை .... .... .... .... .... .... 8
5. ஆசிரியனிலக்கணம் .... .... .... .... .... 9
6. குரு விசுவாசம் .... .... .... .... .... 10
7. தண்டனை .... .... .... .... .... .... 11
8. கல்வியின் அவசியம் .... .... .... .... ,,
9. கல்வியின் பெருமை .... .... .... .... .... 12
10. கற்குமுறை .... .... .... .... .... .... 13
11. ஓலைச் சுவடிகள்—அச்சுப் புத்தகங்கள் .... .... .... 14
12. தமிழிலக்கியங்கள் .... .... .... .... .... 15
13. வசன நூல்கள் .... .... .... .... .... .... 17
14. வர்த்தமான பத்திரிகை ழு .... .... .... .... 19
15. தமிழ் வித்தியார்த்திகள் முன்னாளில் கற்றுவந்தவை .... ,,
16. வித்தியா விநோதிகள் .... .... .... .... 21
17. நெட்டுரு .... .... .... .... .... .... .... ,,
18. மாணாக்கன் கடமைகள் .... .... .... .... 22
19. தன் முயற்சியால் மேலுமேலும் கற்றல் .... .... 23
20. ஆராய்ந்தமைவுடைய கற்றல் .... .... .... 24
21. பாட புத்தகம் .... .... .... .... .... .... 25
22. பார்த்தெழுதல் .... .... .... .... .... 27
23. பாடம் பண்ணுதல் .... .... .... .... .... 28
24. நெட்டுருப் பண்ணத் தக்கவை .... .... .... ,,
25. சுருக்கம் எழுதல் .... .... .... .... .... 29
26. சாஸ்திர அபிவிர்த்தி .... .... .... .... 30
27. தொழின் முயற்சியில் அபிவிர்த்தி .... .... .... 31

SWAMINATHAIYAR LIBRARY
THIRUVANMIYUR
Student Christian Co.

# கல்வி

1. கல்வி – வித்தை – சாஸ்திரம். — கல்வி என்பது கற்றல், அறிவு வித்தை எனப் பொருள்படும். கல்வி என்பது கற்றல் என்கிற பொருளில் தொழிற்பெயரும், அறிவு வித்தை என்கிற பொருளில் தொழிலாகுபெயரும் ஆகும். கல்வி என்பதில் கல் என்பது பகுதி. கல்லுதலாவது கிண்டல்: கிண்டலாவது தோண்டுதல், ஆராய்தல். சப்தார்த்தத்தின் படி, கற்றலாவது யாதொரு விஷயத்தைத் தோண்டி ஆராய்தல் என்பதாம். அங்ஙனம் ஆராய்ந் தறியப்பட்டது கல்வி. வித்தை என்பது, வித்யா என்கிற வடசொல். அது, அறி தெரி எனப் பொருள்படும் வித் என்பத னடியாகத் தோன்றியது. விஷயங்களை ஆராய்ந் தறியும் ஞானமே, கல்வி யென்றும் வித்தை யென்றும் வழங்கப்பெறும். அதனா லன்றோ, கலைகளையும் கைத்தொழில்களையும், கல்வி யென்றும் வித்தை யென்றும் வழங்குகிறோம். அழகு மாதுரியம் இராகவிகற்பம் எனப் பொருள்படுவதான லலிதம் என்கிற வார்த்தையை, வித்தை என்பதோடு புணர்த்தி,

ஓவியம் சிற்பம் இசை கவிதை முதலியவற்றை, லளிதவித்தை என வழங்குவது பொருந்தும். வமிச பாரம்பரியமாய் அநுசரிக்கப்பட்ட ஜீவனோபாயம், குலவித்தை எனப்படும். மனிதன் அறியலாவனவற்றை யெல்லாம் வடமொழிவாணர் அறுபத்துநான்கு கலைகளாக வகுத்திருந்தனர். அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு வித்தையே. அந்தந்த வித்தையின் இலக்ஷணங்களைச் சூட்சுமித் தறிவிப்பது சாஸ்திரம்.

2. **நூல்.** தமிழில், அறம் பொருள் இன்பம் வீடு என்னும் உறுதிப்பொருள்களை அறிவிக்கும் நூல்களும், அந்நூல்களை அறிதற்குக் கருவிகளான நிகண்டு இலக்கணம் கணக்கு முதலிய நூல்களும், கற்றற்குரிய நூல்கள் என்றும், கற்றற்குரிய அந்நூல்களைக் கற்றலே கல்வி என்றும், கொள்வது இயல்பு. கற்றற்குரிய விஷயங்களை உரைப்பது நூல். அது உவமையாகுபெயராய் அமைந்த பெயர். வடமொழியில் புஸ்தகம் கிரந்தம் தந்திரம் என்பன வழங்கும். நூலைச் செய்தவன் ஆக்கியோன் — நூலாசிரியன் — கிரந்தகர்த்தா எனப்படுவான். சான்றோர் செய்த நூல்கள் பொதுவில் இலக்கியம் எனப்பெறும். எதைக் குறித்து இலக்கணம் உரைக்கப்படுகின்றதோ, அது இலக்கியம். இலக்கியத்தின் அமைதியை விளக்குவது இலக்கணமாம்.

3. **ஆசிரியன் — மாணக்கன் — பாடசாலை — பாடம்.**— வித்தை கற்பிப்போன், குரு, வித்தியாகுரு, ஆசாரியன், ஆரியன், உபாத்தியாயன், என்பன ஒருபொருட் கிளவிகள். குரு என்கிற சொல்லுக்கு அஞ்ஞானத்தை நீக்குவோன் என்பது பொருள்.

ஆசாரியன் என்பது, தமிழில், ஆசிரியன் என்றும், ஆசான் என்றும் வழங்கும். அத்தியாயனம் என்பது வேதமோதுதல். ஒத்தாசையாக உடனிருந்து வேதம் ஒதுவிப்பவன் உபாத்தியாயன். இது நாளடைவில் எந்நூலையும் எந்த வித்தையையும் படிப்பிப்பவனை உணர்த்துவதாயிற்று. இது, உவாத்தியான் உவாத்தி என மருவியும் தமிழில் வழங்குகின்றது. போதம் என்பது அறிவு, ஞானம்: அதைக் கொடுப்பவன் போதகன். உவாத்தியானுக்குத் தமிழில் ஈவோன் என்றும் கற்பிப்போன் என்றும் கற்கப்படுவோன் என்றும் பரியாய நாமங்கள் உண்டு. உலகவழக்கில் உவாத்தியான் (வாத்தியார்) என்பதே பெருவரவிற்று.

வித்தையைத் தேடுவோன் வித்தியார்த்தி, வித்தியாபாரகன். எட்டு வயதுக்கு மேற்பட்டவனுய்ப் பதினுறு வயதிற் குறைந்தவன் மாணவகன். எட்டு வயது முதல் பதினுறு வயது வரையில் உள்ள பருவமே வித்தியாப்பியாசத்துக்கு உரிய பருவமாதலால், வித்தியார்த்திக்கு மாணவகன் என்ற அப்பெயர் வழங்குவதாயிற்று. இவ்வடசொல், இவ்வுருவிற் ருகவும், மாணுக்கன் எனத் திரிந்தும், தமிழில் வழங்குகின்றது. சிஷ்யன் என்னும் வார்த்தையும் மாணுக்கனைக் குறிக்கும். படிப்பிக்கை என்பது வடமொழியில் சிக்ஷை எனப்படும். அதனடியாக உபாத்தியாயருக்கு சிக்ஷாகரன் என்றும், மாணுக்கனுக்கு சிக்ஷன் என்றும் பெயர்கள் வழங்கும். நன்ருய்ப் படிப்பிக்கப்பட்டவனை, சிக்ஷைப்பட்டவன் என்பது மரபு. இளைஞரைப் படிப்பித்தல் பாலசிக்ஷை. படிக்கவும் எழுதவும் கணக்குப் போட

வும் கற்பிக்கும் உபாத்தியாயனைக் கணக்காயன் என்பது தமிழ் மரபு. கல்வி பயிலிடமானது கல்வியூரி (கல்லூரி) பள்ளிக் கூடம் கழகம் பாடசாலை கல்விச்சாலை வித்தியாசாலை என்ற பெயர்களால் வழங்கும். கலாசாலைகளைக் கல்லூரி எனல் பொருந்தும். பாடம் என்பது படிப்பு—படிக்கும்படி நியமித்த அளவு—படித்தது மனதி லமைதல்—கற்பிக்குமளவு என ஒன்றுக் கொன்று சம்பந்தமான பல பொருளைக் குறிக்கும். இப்பொருள்களை, பாடங்கொடுத்தல் — பாடஞ்சொல்லல் — பாடங்கேட்டல்—பாடம் படித்தல்—பாடம் பண்ணல்—பாடமாக்கல் — மனப்பாடம்—வாய்ப்பாடம் என்னும் வழக்குகளால் அறியலாம்.

4. **பாலசிக்ஷை**.—'பிள்ளைக்கு வாத்தியாரும் பெண்ணுக்கு மாமியாரும்' என்றது முதுமொழி. அஃதாவது பாலசிக்ஷை அவசியம் என்பதாம். 'ஐந்திலே வளையாதது ஐம்பதில் வளையுமா?' துள்ளித் திரிகின்ற காலையில் பிள்ளைகளைத் துடுக்கடக்கிப் பள்ளியில் வைத்தல் வேண்டும். பிள்ளைகளைப் பள்ளியில் வைப்பது பிள்ளைகளுக்கு இளமையில் செய்யும் சடங்குகளில் ஒன்ருய் வித்தியாரம்பம் எனப்படும். இளமையிற் கல்வி எப்போதும் நிற்கும். சிறுவயதிற் கற்ற கல்வி சிலையில் எழுதிய எழுத்துப் போலாம். ஆதலால் 'இளமையிற் கல்.' கல்வியோடு நல்ல பழக்க வழக்கங்கள் பதிவதற்கும் இளமையே தக்க பருவம். 'இளமையிற் பழக்கம் எப்போதும் மறவாது.' குறித்த காரியங்களைக் குறித்த காலத்திற் செய்தல், உண்மை யுரைத்தல், ஊக்கம், பணிவு, சுத்தம், ஜீவகாருண்யம், தேவபக்தி முதலிய பழக்க வழக்கங்கள் பள்ளிக்கூடத்தில் பாலசிக்ஷையால் நன்கு நிலைத்துவிடும். 'தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டில்' தொடருமாதலால், குழந்தைப் பருவத்தில் தானே இப்பழக்க வழக்கங்

கள் அநுஷ்டானத்தில் வரவேண்டும். 'முன் ஏர் போன வழி பின் ஏர்' ஆகையால், வீட்டில் தாய்தந்தையர் முதலியோர் இப்பழக்க வழக்கங்களைச் சரியாக அநுட்டித்துவரின், சிறுவர் களுக்கும் அவை சுவபாவமாக அநுஷ்டானத்தில் வந்துவிடும். 'இளமையிற் பழக்கம் முதுமையிற் சுபாவம்.' ஒருவர் கல்வியில் எவ்வளவு விற்பனராயினும், இப்பழக்க வழக்கங்கள் பதியப் பெறுவிடின், அவர் தினைத்துணையும் சீர்ப்படுதல் இல்லை. ஆத லால் பெற்றோர்கள் இதுவிஷயத்தில் எச்சரிக்கையாக இருத்தல் வேண்டும்.

5. **ஆசிரியனிலக்கணம்.** — குருவினிடத்தில் உள்ள துரப் பியாசங்கள் சிஷியர்களிடம் இளமையில் சுலபமாக ஒட்டிக் கொள்ளும். ஆகையால் சிஷ்டாசாரங்கள் உள்ள சற்குருவி னிடத்தில் பிள்ளைகளைப் படிப்பித்தல் வேண்டும். ஒரு கையில் பிரம்பும் ஒரு கையில் புத்தகமுமாய்க் 'குருவேஷங் கொண்டவ னெல்லாம் குரு ஆவானோ?'

குலனும் குணனும் குரவரைப் பேணும்
நலனும் கடவுளை நயத்தலும் கருணையும்
புலனவித் தொழுகலும் பொறையும் தோற்றமும்
உலகிய லறிந்துயிர்க் குறுதி கோடலும்
சுற்றவர் காமுற வாழ்தலும் காந்தியும்
மதிநிகர் கல்வியும் கதிர்நிகர் வனவாம்
வாய்மையும் தூய்மையும் வழுவுத லின்றாய்க்
கற்றன யாவுங் கழகத் துதவும்
பெற்றியன் மறந்தும் பிறர்பழி கூறான்
சதிருடை யேனெனத் தற்புகழ்ந் தறியான்
முதுமொழி யிலக்கண விலக்கிய முறையே
புதுமொழி புணர்க்கும் புலமை யோனே

ஆசிரிய ஞதற்கு உரியவன். இத்தகை யிலக்கணம் வாய்ந்த ஆசிரியனது அருமை நோக்கியே அன்றோ 'தாரமும் குருவும் தலைவிதி' என்றோர் பழமொழி வழங்குகின்றது.

6. குரு விசுவாசம். — 'எழுத்தறிவித்தவன் இறைவனாகும்' என்பதனால், குருபீடத்தின் கௌரவம் விளங்கும். 'கற்பித்தவன் கண்ணைக் கொடுத்தவன்.' உவாத்தியான் ஐங்குரவரில் ஒருவனாக மதிக்கப்படுகிறான். 'குரு வில்லார்க்கு வித்தை யில்லை (முதல் வில்லார்க்கு இலாப மில்லை).' ஆசாரியப் பிரதிபத்தி பண்ணுவதை விசேஷமாகக்கொள்வது இந்துக்களில் என்றும் உள்ள படியே ஆகும். ஒரு நூலை ஓதத் தொடங்குகையில் 'நன்றாக, குருவாழ்க, குருவே துணை' என்று தொடங்குவதே தமிழ் மரபாக இராநின்றது. எல்லா நன்மையையும் 'குரு கடாக்ஷம் கூட்டுவிக்கும்' என்பதும் நமக்குத் துணிபே. திருமாலையாண்டா னிடத்தில் இளையாழ்வார் திருவாய்மொழிக்கு அர்த்தம் கேட்டு வருகையில், ஒரு அர்த்த ப்ரஸ்தாவத்திலே ஆண்டான் பிரதிபாதித்த அர்த்தங் கேட்டு, இளையாழ்வார் 'இங்கே ஆளவந்தார் இப்படி அருளிச்செய்யார்' என்று விண்ணப்பித்த அளவில், ஆண்டானும், 'நீர் ஆளவந்தாரைக் கண்ணாலும் காணா திருக்க, இப்படி அருளிச்செய்யார் என்கைக்கு நிதானம் ஏது?' என்று கேட்டாராக, இளையாழ்வாரும் 'நான் ஆளவந்தாருக்கு ஏகலவ்யன் அன்றோ' என்று உரைத்தனராம். குரு விசுவாசம் இல்லாமல் குருவினிடத்தில் வஞ்சகம் பாராட்டினோரைக் குருத்துரோகி என்று எவரும் நிந்திப்பர். இவ்வித குருத்துரோகிகளுக்கு எந்த வித்தையும் ஈடேறாது என்பதும் நம்மவர்க்குத் துணிபே.

தன்னை வழிபட்டொழுகும் மாணாக்கனை வஞ்சிக்கின்ற ஆசிரியனை முடத்தெங்கோ டொப்ப இழித்துரைப்பர். மொழிகுணமின்றி இழிகுணமுடையாரும், வரலாற்று முறைமையில் வந்த ஆசிரிய பரம்பரையில் கல்வி பயிலாத சுயாசாரியரும், ஆசிரியர் ஆகார். இன்னோரன்னோ ரிடம் கல்வி பயில்வோர் வித்தியாபிவிருத்தியும் விளக்கமும் எய்தார்.

7. **தண்டனை.** — கால்பிடித்து மூக்கணாங்கயிறு கோத்துத் திருப்புகையில் 'அடியாத மாடு படியாது.' 'அடித்து வளர்க்காத பிள்ளையும் முறுக்கி வளர்க்காத மீசையும் செவ்வையாகா.' 'பரிந்த விடம் பாழ்.' 'கல்வி என்கிற பயிருக்குக் கண்ணீர் என்கிற மழை வேண்டும்.' அம்மழைக் குரிய மேகம் உவாத்தியே. "துஷ்டச் செயல்களைச் செய்தவிடத்தும், படிக்கவேண்டும் பாடங்களைப் படியாது பராமரிக்கையாக இருந்தவிடத்தும், ஒழுக்கம் தவறினவிடத்தும், பிள்ளைகளைச் சிக்ஷிக்காமல் விடலாகாது. நற்செயல்களைச் செய்தவிடத்தும், பாடங்களைச் செவ்வையாகப் படித்தவிடத்தும், நல்லொழுக்கத்தை மேற்கொண் டொழுகுமிடத்தும், நன்மையைப் பாராட்டி உற்சாகம் உண்டாக்கவேண்டும்." 'வித்தியாசாலை விநோதசாலை' யாகையால், உவாத்தியான் எப்போதும் கடுகடுப்பும் வெடுவெடுப்பும் கொள்ளாமல், 'அடிக்கு மொருகை அணைக்கு மொருகை' என்கிற மர்மத்தை அனுசரித்து, பயத்தாலும் நயத்தாலும் பிள்ளைகளைத் திருத்தி நல்வழிப் படுத்தல் வேண்டும்.

8. **கல்வியின் அவசியம்.**—நம்முடைய நாட்டில் ஜீவனோபாயங்கள் வமிச பாரம்பரியமாக அனுசரிக்கப்பட்டு வந்தன

எல்லாம் குலாசாரத் தொழில்கள். ஆகவே அத்தொழில்களைச் செய்து பழக வித்தியாசாலைகள் இருந்தில. 'அப்பியாசம் குலவிருது.' 'மகனறிவு தந்தையறிவு.' 'வைத்தியன் பிள்ளை வைத்தியன்.' ஆகையால், எப்படியும் 'குலவித்தை கற்றுப் பாதி கல்லாமற் பாதி'யாக வந்துவிடும். கண்ணிற் கண்டதைக் கையினாற் செய்கிற குலவித்தைகளை அனுசரிப்பவர்கள், நூற் பயிற்சியை வெகுவாய் வேண்டாவிடினும், அவர்கள் எழுதவும் படிக்கவும் கணக்குப் பார்க்கவும் அறிவது அவசியம். 'கற்றவனுக்கு எந்த வித்தையும் கால் நாழிகை'யில் வருமாகையால், இவற்றையேனும் 'கல்லாதவரே கண்ணில்லாதார்' ஆவர். 'எண்ணு மெழுத்தும் கண்ணெனத் தகும்.' ஆதலின் 'வித்தை விரும்பு.' 'வித்தை யுள்ளவன் பெரியவன்.' 'தனக்குப் பாழ் கற்றறி வில்லா வுடம்பு.' 'படித்தவனும் படியாதவனும் கொக்கும் அன்னமும் போல்வர்.'

> விலங்கொடு மக்க ளனையர் இலங்குநூல்
> கற்றாரோ டேனை யவர்.

9. **கல்வியின் பெருமை.**—கல்வி என்பது ஒருவாறு தொழிற்பண்புப்பெய ராயினும், அதனைச் செல்வப்பொருளோடு ஒப்புமையாகக் கல்விப்பொருள் என்பது தமிழ் வழக்காக இருக்கின்றது. 'கல்வியுடைமை பொருளுடைமை யென்றிரண்டு, செல்வமுஞ் செல்வ மெனப்படும்.' 'கைப்பொரு டன்னின் மெய்ப்பொருள் கல்வி.' ஏனெனின், 'கைப்பொருள் போனாலும் கல்விப்பொருள் போகாது.' கைப்பொருள் அறமும் இன்பமும் பயக்கும். கல்விப்பொருளோ 'அறம்பொரு

[ளி]ன்பமும் வீடும் பயக்கும்.' பொருட்செல்வம் பொருந்தியிருப்பினும், 'கல்வி யில்லாச் செல்வம் கற்பில்லா வழகே.' 'மன்னனுக்குத் தன்தேச மல்லாற் சிறப்பில்லை.' வித்துவானுக்கு எது பரதேசம்? 'கற்றோர்க்குச் சென்றவிட மெல்லாம் சிறப்பு.' 'கற்றோர்க்குக் கல்வி யழகே அழகு.' 'தோழனுவது துலங்கிய கல்வி.' 'வித்துவான் தனவான்.' 'புத்திமான் பலவான்.'

> இம்மை பயக்குமால்: ஈயக் குறைவின்றால்:
> தம்மை விளக்குமால்: தாமுளராக் கேடின்றால்:
> எம்மை யுலகத்தும் யாங்காணேம், கல்விபோல்
> மம்ம ரறுக்கு மருந்து.

கல்வி கற்றவர் தம்மளவில் சொற்சுவை பொருட்சுவைகளை அனுபவித்தலாலும், புகழும் பொருளும் பூசையும் பெறுதலாலும், முத்தி நெறியை அடைபவ ராதலாலும், இடையறா இன்பம் பெறுபவராவர். அறியாத பல அரிய விஷயங்களையெல்லாம் இவர்களை யடைந்து அறிந்தோமென உலகத்தவர் பலரும் அவரிடம் அன்புடையவராவர். வாலிபனே யாயினும், 'கல்வியுள்ள வாலிபன் கன கிழவனே.'

10. **கற்குமுறை.** — ஒவ்வொருவரும் நல்லாசிரியர்க ளிடத்திலே கல்வியை ஐயந்திரிபறக் கற்றல் வேண்டும். ஐயமாவது, பழுதையோ பாம்போ, குற்றியோ மகனோ, இப்பியோ வெள்ளியோ, இதுவோ அதுவோ என ஒன்றிலே துணிவு பிறவாது நிற்றல்: திரிபாவது, பழுதையைப் பாம்பென்றும், குற்றியை மகனென்றும், இப்பியை வெள்ளியென்றும், ஒரு பொருளின்

கண் இல்லாத தன்மையை இருப்பதாக நிச்சயித்து, ஒன்றை மற்றொன்றாகத் துணிதல். கல்வியிலே தேர்ச்சியடைய விரும்புவோர், ஒருநாள் ஊக்கமாகவும் மற்றொருநாள் சோம்பலாகவும் இராமல், தங்கள் தங்கள் சக்திக் கேற்ப, எப்போதும் ஒரே விதமாய், கல்வியிலே இடைவிடாது பயிலல்வேண்டும். 'ஓதாமலொருநாளு மிருக்க வேண்டாம்.' ஏனெனின், 'நூறு நாள் ஓதி ஆறு நாள் விடத் தீரும்.' ஆகையால், சோர்வடையாமல் நாடோறும் சிறிதாயினும் கிரமமாகக் கற்பவர்கள் எப்படியும் அறிவுள்ளவ ராவர். 'பாட மேறினும் ஏடது கைவிடேல்' என்பதைப் பாராட்டாமல், தங்களை மிகவும் சூக்ஷமக்கிராகிகள் எனக் கருதி ஒவ்வொரு வேளையில் மாத்திரம் கற்கின்றவர், அதிகமாகத் தேர்ச்சி அடையமாட்டார்.

> தொட்டனைத் தூறு மணற்கேணி: மாந்தர்க்குக்
> கற்றனைத் தூறு மறிவு.

ஆகையால் கல்வியைச் சிறிது கற்றவளவில் அமையாது மேலு மேலும் கற்றலே தகுதி. தம்மினும் குறைவாகக் கற்றவரை நோக்கி, 'நாம் இவரினும் இத்துணை வல்லமை உடையோமன்றோ' என இறுமாந்து மகிழாமல், ஒவ்வொருவரும்

தம்மினும்

> ¹ கற்றாரை நோக்கிக் கருத்தழிக, கற்றதெல்லாம்
> எற்றே யிவர்க்குநா மென்று.

**11. ஓலைச் சுவடிகள்—அச்சுப் புத்தகங்கள்.**—முற்காலத்தில் ஓலைகளில் எழுதிய புத்தகங்களே வழங்கியிருந்தன. காகிதம் செய்யும் வித்தை விசேஷப்பட்ட பிறகு அச்சுவித்தை விசே

ஷப்படுவதாயிற்று. ஒவ்வொருவனும் தனக்கு வேண்டிய புத் தகங்களை எழுதிப் படிப்ப தென்றால், தனிகரல்லாதவர் பல நூல்களைப் படிப்பது இயலுமா? ஆயினும் நூல்களைத் தாங்களே எழுதிப் படிப்பதனால், படித்த நூல் படித்தவளவில் அழுத்த மாக மனதிற் பதிந்திருக்கும் அநுகூலம் ஒன்று மாத்திரம் இருந்தது. முற்கால வித்துவான்களுக்கு ஞாபகசக்தி விசே ஷித் திருந்ததற்கு முக்கிய காரணம் இதுவே. கற்ற கற்ற விஷயங்கள் எல்லாவற்றையும் மறவாமைப் பொருட்டே, இலக் கணம் மருத்துவம் சோதிடம் முதலிய சாஸ்திரங்கள் சூத்திர மும் செய்யுளுமாக எழுதப்பட்டு வந்தன. அச்சுவேலை இங்கே அனுசரிக்கலான பிறகே தமிழில் வசன நூல்கள் தோன்ற லாயின. அதற்கு முன் நூல்களின் உரையன்றித் தனியாக வசனநூல்கள் இல்லை. வசனரூபமாக எழுதப்பட்ட இராமா யணம் பாரதம் முதலிய சில நூல்களே, பாமர ஜனங்களுக்குப் படித்துப் பொருள் தேடும் சிலரிடத்தில், எழுவாய் பயனிலை பிறழ்ந்தும், இடையின வல்லின பேதம் விளங்காமலும், விட்ட இடம் தொட்ட இடம் தெரியாமலும், இரண்டு மூன்று முழ நீளமான வாக்கியங்களோடு, தற்குறிப்பேற்றம் முதலியன பொருந்திப் பிண்டாகாரமாக இருந்தன. வசன நூல்கள் இல் லாமையால் வித்தியார்த்திகள் சுலபமாக வித்தியாபிவிர்த்தி அடையக்கூடாமல் இடர்ப்பட்டனர்.

12. **தமிழிலக்கியங்கள்.**—காலங்கண்ட தமிழிலக்கியங்களை வகைப்படுத்திப் பரிசோதிக்கையில், நீதிநூல்களும், நவரசாநு பவ ஜநிதமான காவியங்களும், ஸ்தல மகாத்மியமாய்ப் பெரும்

பாஷ மொழிபெயர்ப்புக்களான புராணங்களும், சமய சித்தாந் தங்களும், பக்திரஸம் பெருக்கெடுக்கும் சமயச்சார்பான தோத் திரப் பாக்களும் ஆகிய சில பாகுபாடுகள் மாத்திரமே பெறப் படுகின்றன. புராணங்களிற் பெரும்பாலன பிற்காலத்தனவே. தமிழ் வித்துவான்கள் சமயசாத்திர மின்றிப் பொதுவில் கற் பனவெல்லாம் நீதிநூல்களும் காவியங்களுமே. இதனோடு நிரம் பிய இலக்கணப் பயிற்சியும் நீதிநூல்கள் நீங்கலான ஏனைச் சங்க நூற் பயிற்சியும் உடையவர்கள், அவருள்ளும் சிலரே யாவர். இச்சிலருள்ளும் பிராமணராகின்றவர்களில் ஒருசிலரே ஒரு வாறு வடமொழிப் பயிற்சி உடையோர். ஏனையோர் தமிழன்றி வேறுபாஷை நூல்களையும் சாஸ்திரங்களையும் கற்பது அருமை யிலும் அருமை. ஒன்றொன்று குறைவின்றிப் பலதுறைப் பட்ட நூல்களைப் பல பாஷைகளினின்றும் மொழிபெயர்த்தும் புதுவது புனைந்தும் நாட்குநாள் தங்கள் இலக்கியங்களையும் சாஸ்திரங்களையும் வர்த்தகங்களையும் பெருக்கிவருகின்ற ஆங் கிலேயரே, இரண்டு பாஷையில் விற்பத்தி யில்லாதார் புலமை. நடாத்துவதை, பறவைகள் ஒரு சிறகைக் கொண்டு பறப்பதனோ டொக்கும் என்பர். தமிழில் விற்பத்தி யடைய விரும்புவோர், வடமொழியாயினும் இங்கிலீஷாயினும் கற்றா லன்றி, அறிவு தெளிவடைந்து பயன்படலான நூல்களை இயற்றவும், தமிழின் குறைபாட்டை அறிந்து ஆவனவற்றைச் செய்யவும் வகையறி யாது, 'அகழியில் விழுந்த முதலைக்கு அதுவே வைகுண்டம்' என்பதாக, தங்களையும் தாங்கள் கற்ற தமிழையுமே, பாவம். பெருமை பாராட்டாநிற்பர். இவர்கள், பெரியோர் தேடி வைத்த தனத்தை அழியாமற் பாதுகாக்கும் அவ்வளவினரே

யன்றி, அதனை வேறு சாதனங்களால் மேன்மேலும் பெருக்கிச் சிறந்த முதலாளிகள் ஆவா ரல்லர். இயற்றமிழானது பாவகையில் வேறெந்தப் பாஷையினும் வெகுவாய் இளைத்துக்காட்டுவதில்லை. சிறுவர்க்கான வசனநூல்களும் சாஸ்திரங்களுமே தமிழில் சுத்த சூனியமாக இருத்தலால், இக்குறைவை நிறைவுறுத்தாது விடுவோ மாயின், நமது பாஷையிலுள்ள இலக்கியங்களால் மாத்திரமே அறிவு தெளிவடைந்து காரிய நிர்வாகஞ் செய்தலான எதிர்காலம் நேர்லுகையில், நாம் கல்வியறிவு சாலாத கடையர்கள் எனப் பிற தேயத்தால் இகழ்ச்சி யடைபவர் ஆவோம். அவ்வத் தேயத்தருடைய இலக்கியத் தொகுதியே அவ்வத் தேயத்தர் திறத்தை நிறுத்துக்காட்டும் துலையாகும்.

13. **வசன நூல்கள்.** — தீர்க்கமான வசன நூல்கள் தமிழில் இன்னும் வெகுவாய்ப் பல்கவில்லை. புராணேதிகாசங்களில் முக்கியமான எல்லாம் கத்தியபாகத்தில் வந்துள்ளன. தாண்டவராய முதலியார் மொழிபெயர்த்த பஞ்சதந்திரம் சிறுவர்கள் வசன நடையிற் பழகுதற்கு மிகவும் பொருந்தியது. வீராசாமிச் செட்டியார் தினவர்த்தமானி என்னும் பத்திரிகையில் எழுதியவற்றைத் தொகுத்துக்கொண்டு விநோதரசமஞ்சரி என வழங்கும் நூலும், பலருக்கு விநோதம் விளைவிக்கத்தக்கதே. ஆறுமுக நாவலர் எழுதிய வசன நூல்கள், செந்தமிழ் நடையில் பழகி விருத்தியடைய விரும்புவோர்க்கு நல்ல சாதனங்களாக இருக்கின்றன. மயூரம்—வேதநாயகம் பிள்ளை எழுதிய பிரதாப முதலியார் சரித்திரம், சுகுணசுந்தரி சரித்திரம், பெண்கல்வி, பெண்மதிமாலை முதலியன, சிறியரும் பெரியரும் பலமுறை படித்து நன்மை எய்தலான நூல்களாகும்.

[illegible] எழுந்தும் குருபரம்பரா ப்ரபாவம் ரஹஸ்ய [illegible] போன்ற கத்தியபாக மானவைகளே யாயினும், பெரும்பான்மையாய் வடமொழிகளும் வடமொழித் தொடர்களும் வடமொழி சுலோகங்களும் மல்கி, மணிப்ரவாளம் என்பனவாய் இருத்தலின், இவை செந்தமிழ் வசன நூல்களான கணக்கில் வைத்துக் கருதப்படுவ தில்லை. தற்காலம் பிரசுரமாகி வருகின்ற அபிநவ கதைகளையும் உரையிடையிட்ட நாடகங்களையும் வியாசங்களையும் மொழிபெயர்ப்புக்களையும் பற்றிப் பெரியோர்களுடைய அபிப்பிராயம் இன்னும் திட்டமாக ஏற்படவில்லை. வர்த்தமான பத்திரிகைகளுள் சில, இங்கிலீஷில் மிக்க பாண்டித்தியம் உடையவர்களாலும், சில, தமிழில் மாத்திரமே விற்பத்தி உடையவர்களாலும் நடைபெற்றுவருகின்றன. தமிழில் நிரம்பிய புலமையோடு இங்கிலீஷிலும் போதுமான விற்பத்தியுடையவர்கள் இத்துறைகளில் உழைக்கப் புகுவார்களாயின், தமிழில் கத்தியபாகம் நாட்குநாள் அழகும் ஆற்றலும் அடைவதாகும். ஆயினும் தமிழின் தற்கால கதியானது நன்மையை நாடிச் செல்வதாகவே புலப்படுகின்றது. தமிழ் வசனத்துக்கு இங்கிலீஷே தற்காலம் செல்வச் செவிலியாக இருத்தலின், இந்தத் தாயின் போஷணையால், நாளடைவில் தமிழ் வசனம் புஷ்டியடையும் என்பதில் எட்டுணையும் ஐயமில்லை. எப்படியும் காலாந்தரத்தில் சாரமில்லாத நூல்கள் சூனியமாகிச் சத்துள்ள நூல்களே நிலைபெறுவனவாமாதலால், தமிழின் எதிர்கால நிலைமையையும் எதிர்காலத்தில் தமிழ் மாத்திரமே கற்போருடைய நிலைமையையும் குறித்து இப்பொழுது நாம் இடர்ப்பட வேண்டா.

14. வர்த்தமான பத்திரிகை மு.—முற்காலத்தில் பிரதேச வர்த்தமானங்களையும் பிறதேச வர்த்தமானங்களையும் அப்பேர்ந்தைக் கப்போது அறியலான வாயில்கள் இல்லை. தீர்த்தயாத்திரை செய்வோரும் கப்பல் வர்த்தகரும் வாணிகச்சாத்தும் தேசாந்தரப் பிரயாணிகளும் படையெடுத்துச் செல்லும் போர்வீரரும் துறவிகளான சந்நியாசிகளும் முதலியோருமே ஒரு தேச விசேஷ வர்த்தமானங்களை மற்றொரு தேசத்தில் பரவுவிப்பவர்கள். அந்த விசேஷங்களும் தத்தத் காலத்தில் உடனுக்குடனே பரவுவது இயலாது. அவைகள் நாள் சென்று பரவுவதில் உண்மை சிதறி உயர்வுநவிற்சி ஆதலும் உண்டு. இக்காலத்தில் சிறிது கல்வி கற்றவர்களும் வர்த்தமான பத்திரிகைகளை வாசித்துப் பல விஷயங்களை அறிந்து அறிவு தெளிவதும் பல தொழிற்றுறைகளில் பிரவர்த்திப்பதும் ஆகின்றனர். கல்வியபிவிர்த்திக்கும் வர்த்தக வபிவிர்த்திக்கும் நாகரிக வபிவிர்த்திக்கும், அச்சியந்திரமும் இருப்புப்பாதையும் நீராவிக்கப்பலும் தபாலும் தந்தித்தபாலும் பெருஞ்சாதனங்கள் ஆகிவிட்டன.

15. தமிழ் வித்தியார்த்திகள் முன்னாளில் கற்றுவந்தவை.—குலாசார வித்தையை அனுசரிப்போரும் மற்றையோரும் சிறுவயதில் கல்வி கற்கும் இடமானது பள்ளிக்கூடம் கணக்காயர் கழகம் எனப்படும். இது, இங்கிலீஷ் பாடசாலைகள் ஏற்பட்டபிறகு, தெருப்பள்ளிக்கூடம் கிராமபாடசாலை என வழங்குவதாயிற்று. இதில் நடந்தேறிவந்த பாடங்களாவன:—அரிச்சுவடி, பெயர்ச்சுவடி; ஒளவையாரருளிச்செய்த நீதிவாக்கியங்கள், வாக்குண்டாம், நல்வழி; சில சதகங்கள், நைஷதம்,

நாலடியார், திருக்குறள் முதலியவற்றின் மூலம்; எண்சுவடி, நெல்லிலக்கம், பொன்னிலக்கம்; முறையஞ் சொல்லுதல், சட்டமெழுதல் முதலியனவாம். எந்த நூலுக்கும் பொருள் உரைப்பது இல்லை. பின்னால் வித்துவான்களிடத்தில் கல்வி கற்பதற்கு ஆதாரமான விஷயங்கள் மாத்திரமே இக்கழகங்களில் அடிகோலிக் கற்பிக்கப்பட்டுவந்தன. கணக்காயரிடம் கற்ற கல்வி மற்றைப்படி ஒன்றுக்கும் பற்ருது என்பதற்கு

கற்றதூஉ மின்றிக் கணக்காயர் பாடத்தாற்
பெற்றதாம் பேதையோர் சூத்திர—மற்றதனை
நல்லா ரிடைப்புக்கு நாணுது சொல்லித்தன்
புல்லறிவு காட்டி விடும்

என்ற நாலடியே போதிய சான்று. கணக்காயரிடம் கற்குந்தனையும் மாணுக்கர்கள் விளந்தவாறு விளக்கும் விளிகளே யாவர். பிறகு வித்துவான்களிடம் பெரும்பான்மையாய்க் கற்பனவாவன,—கணக்காயரிடம் கற்ற மூலபாடங்களுக்குப் பொருளும், இலக்கணமும், செய்யுள் செய்யக் கற்றலுமாம். கணக்கதிகாரம் கற்பாரும் உண்டு. அப்பால் சமயச் சார்பான நூல்களில் பழகுவது வழக்கம். சமயநூற் பயிற்சி வேண்டுவோர்க்குப் பெரும்பான்மையாய் மடங்களே ஆதாரமாக இருந்தன. சைவ மடங்களில், சமயநூல்கள் மாத்திரமே யன்றி, இலக்கண விலக்கியங்களும் கற்பிக்கப்பட்டுவந்தன. மடங்களின் சகாயமும் சன்மானமும் இல்லையேல், தமிழ் நெடுநாள் முன்னரே சீரழிந்து போயிருக்கும். பற்பல இலக்கண விலக்கியங்களை மடாதிபதிகள் பிரதிசெய்து பரிபாலித்து வந்தனர். சென்ற இரண்டு

மூன்று நூற்றாண்டுகளில் விசேஷ வித்துவான்களாக இருந்தவர்களில் பெரும்பான்மையோர் சைவ மடத்தைச் சேர்ந்தவர்களே.

16. **வித்தியாவிநோதிகள்.**—மேலுமேலும் பேரிலக்கியங்களையும் உரைகளையும் பார்த்தலும், கல்விமான்கள் சபையிலே பிரசங்கிப்பதைக் கேட்டலும், சமயோசிதமாகத் தனிப்பாடல்கள் பாடுவதும், வழிநூல்கள் சார்புநூல்கள் இயற்றுதலும், நூல்கள் அரங்கேறுகையில் ஆக்ஷேபனை சமாதானங்கள் உரைப்பதும், இவைபோல்வன பிறவும், வித்தியாவிநோதிகளுக்குக் காலக்ஷேபமாக இருந்தன. தமிழில் சாஸ்திரப்பயிற்சி வேண்டுவோர்க்கு வியாகரணம் ஜோதிஷம் வாகடம் முதலியன தவிர வேறில்லை. தருக்கம் முதலியன அறிய வேண்டுவோர் வடமொழியிற் பயிலல் வேண்டும். பிராமணர் தவிர வடமொழிப் பயிற்சியுடையவர்கள் தொகை தமிழ் நாட்டில் மிகச் சுருக்கமாகவே இருந்தது. தொழிற்றுறைகள் எல்லாம் குலாசார வித்தைகளாக இருந்தமையால், சாஸ்திர அபிவிர்த்தி செய்வோர் மிகச் சிலரே. பூகோள சாஸ்திரம் தேசசரித்திரம் வீசகணிதம் திரிகோணமிதி வசனநூல்கள் எனு மிவைகள், இங்கே இங்கிலீஷ் பாடசாலைகள் ஏற்பட்ட பிறகே கற்கப்படுவன ஆயின.

17. **நேட்டுரு.**—'சதசுலோகீ ஏகபண்டிதஃ' என்று வடமொழியில் ஒரு மூதுரை வழங்கும். நல்லாசிரியரிடத்தில் நூறு சுலோகங்களைக் கிரமமாகப் பொருள் உணர்ந்து பஞ்சலக்ஷணப் பிரயோகம் பண்ணக் கற்றறிந்த மாணுக்கன் ஒரு பண்டிதனே என்பது அம்மூதுரையின் கருத்து. இக்காலத்தில் அச்சுவேலை

மலிவாகி *உரையும் இலக்கணக் குறிப்பும் விசேஷக் குறிப்பும் பெருகிவிட்டபடியால், இங்கிலீஷ் பாடங்களைப் படித்துச் சலித்த மாணுக்கர்கள், இவ்வுரைகளையும் குறிப்புக்களையும் இயன்றமட்டில் நெட்டுருப்பண்ணி, பரீக்ஷையில் வந்தமட்டில் ஒப்பித்துவிடும் இயந்திரங்களாகி விடுவோராயினர். சில இங்கிலீஷ் பாடங்களும் இந்த இயந்திரங்களுக்குக் குருட்டுப் பாடமே. 'பாடமே யோதிப் பயன்றெரிதல் தேற்ருத மூடர்' ஆவார் இவர்களே யன்ருே. பரீக்ஷையில் நூற்றுக் கித்துணைவர் தேறு கடை யாயினர் என்பதே நோக்கமான உவாத்திகள் இன்னும் கண்மூடிக்கொண் டிருப்பா ராயின், மாணுக்கர்க ளனைவரும் உடையும் உண்டியும் உறக்கமும் வேண்டும் எடிஸன் போனே கிராப்புகளே யாவர். நூல்களான வரத்துக்கால்களை இயன்ற மட்டும் ஏற்றுக்கொண்டு பரீக்ஷைகளாகிற பைங்கூழை விளைவிக்கும் ஏரிக ளாக்காமல், மாணுக்கர்களை, ஆசிரியர்கள், இறைக்க ஊறும் மணற்கேணிக ளாக்கிவிடவேண்டும். ஆசிரியர்கள் மலைகளாக நின்ருல், மாணுக்கர்கள் ஆறுகளாய்ப் பெருகுவார்கள். ஆசிரியர்கள் அணைக்கட்டுக்களும் ஆவாராயின், சாஸ்திர நன்செய்கள் சாலவும் பயன்படும்.

18. **மாணுக்கன் கடமைகள்.**—ஆசிரியரிடத்தில் நூல்களைக் கற்கும்போது மாணுக்கன் அனுசரிக்கத்தக்க கடமைகள் அடியிற்கண்ட சூத்திரத்தால் விளங்கும்.

> நூல்பயி லியல்பே நுவலின், வழக்கறிதல்,
> பாடம் போற்றல், கேட்டவை நினைத்தல்,
> ஆசாற் சார்ந்தவை அமைவரக் கேட்டல்,
> அம்மாண் புடையோர் தம்மொடு பயிறல்,
> வினுதல், வினுயவை விடுத்தல், என்றிவை
> கடனுக் கொளினே மடநனி இகக்கும்.

ஓராசிரியரிடம் கல்வி கற்றுப் புலமை நிரம்புமுன்னே பல ஆசிரியரிடம் அலைந்து திரிபவர், செடிதோறும் அலைந்து தழை மேயும் ஆடுகளை போல்வர். நீரை வார்க்குந்தோறும் அதனை ஒழுகவிடுகின்ற இல்லிக்குடம் போல், ஆசிரியர் கற்பிக்குந் தோறும் நூற்பொருள்களை மறந்துவிடாமல், வயிறு நிறையப் புல்லை மேய்ந்து ஓரிடத்திருந்து அசைபோடுகின்ற ஆவைப் போல், ஆசிரியனிடத்தில் நூற்பொருளை உள்ளநிறையக் கேட்டுக்கொண்டு, பின்பு ஏகாந்தமான இடத்தி லிருந்து, ஆசிரியன் கற்பித்தவற்றை ஒழுங்காகச் சிந்தித்து மனதிற் பதியவைத்துக் கொள்ளவேண்டும்.

19. **தன் முயற்சியால் மேலுமேலும் கற்றல்.**—கல்வி கற்கு மாணுக்கன் ஆயுள் முழுவதும் ஆசிரியனிடம் பாடங் கேட்பதில்லை. நூல்களைப் படித்தறிய ஒருவாறு அர்த்தஞானம் உண்டாக்கிக் கல்வியில் ஊக்கத்தைப் பிறப்பித்துச் சிறிதாறு வழிகாட்டியாகத் தொடர்ந்து, அப்பால் மாணுக்கனைத் தன்போக்கிலே போகவிடுவது ஆசிரியனுடைய கடமை. இறகு முளைத்த பறவைக் குஞ்சுகள் தத்தித் தொத்திப் பறக்கத் தொடங்கிச் சில நாளில் தாங்களே இரைதேடிப் பிழைக்கின்றன. தாய்ப்பாலுண்டு இடுப்பிலும் தோளிலும் எடுத்து வளர்க்கப்பட்ட பச்சிளங் குழந்தைகள், நாளடைவில் தவழ்ந்து நடத்தலாய் ஓடத் தொடங்குகின்றன. ஆசிரியரிடம் கற்கலாயினவற்றைக் கற்ற பின்னர், மாணுக்கர்கள் அவ்வளவில் அமையாது, அகராதி இலக்கணம் முதலிய கருவிநூல்களின் உதவி கொண்டும், தெரியாதவைகளைப் பலரைக் கேட்டுத் தெளிந்தும், மேலும் மேலும்

கற்றல் வேண்டும். ஆசிரியரிடம் கற்ற அளவிலே கல்வியை விட்டவர்கள், எத்துறையிலும் எந்த சாஸ்திரத்திலும் பாண்டித்திய முள்ளவர் ஆகார். ஆசிரியரிடம் கல்வி கற்கையில் குசாக்கிரபுத்தி யின்றி இடைமாணுக்கர்களாய் இருந்தபேர்களில் பல்லோர், பின்னர்த் தாங்கள் ஊக்கங்கொண்டு மேலும் மேலும் செய்த அபிவிர்த்தியால், பெரும் புலவர்களாகிப் பேரும் புகழும் அடைந்துளார். எப்படியும் நாம் கற்ற கல்வி ஜீவனார்த்தத்துக்குப் போதியதாக இருத்தலால், மேலும் மேலும் கற்றுமண்டை வெளுப்பா னேன் என்பவர்கள், சாப்பாட்டிராமரே யாவர். 'செவிக்குண வில்லாத போது சிறிது, வயிற்றுக்கு மீயப் படும்.' கல்வி கற்பிக்கும் மர்மத்தை நன்குணர்ந்த ஆசிரியர்களிடம் பழகிய மாணுக்கர்கள், தங்களை ஆசிரியர் விட்டு விட்ட இடத்திலே தானே நிலைகொண்டிருக்க ஒருப்படார்.

20. **ஆராய்ந் தமைவுடைய கற்றல்.**—ஆசிரியரிடங் கற்பன கற்று, வயிற்றுப்பாட்டுக்கு ஒரு ஜீவனோபாயத்தைத் தேடிக் கொண்ட பிறகு, மேன்மேலுங் கற்று அபிவிர்த்தி செய்ய அவாவுகின்றவர்கள், எல்லா இலக்கியங்களையும் பல துறைப்பட்ட சாஸ்திரங்களையும் கற்கப் புகுவது அசாத்திய மாகும். ஏனெனின் 'கல்வி கரையில கற்பவர் நாள்சில, மெல்ல நினைக்கிற் பிணிபல.' ஆகவே அன்னோர் 'தெள்ளிதின், ஆராய்ந்தமைவுடைய கற்பவே நீரொழியப், பாலுண் குருகிற் றெரிந்து.' சாஸ்திர அபிவிர்த்தி செய்வதானாலும், இலக்கிய அபிவிர்த்தி செய்வதானாலும், நூல்களைக் கற்காமல் ஒன்றும் செய்ய முடியாது. நூல்களைக் கற்குமிடத்தில் ஒழுங்கான சில முறைகளை அனுசரித்

தல் வேண்டும். வழிதுறை யில்லாமல் 'கண்டது கற்கப் பண்டித னாவான்' என்று நம்பி, கண்ட கண்ட நூல்களையெல்லாம் கற்ப வர், 'பலமரம் கண்ட தச்சன் ஒரு மரமும் வெட்டமாட்டான், என்பது போல, உபயோகமான யாதொரு காரியமும் செய்ய உதவமாட்டார். ஓட்டமும் நடையுமாய்த் தாண்டுகால் பாய்ச்சி நுனிப்புல் மேய்ச்சலாக எல்லா நூல்களையும் கற்பதினும், கற்ற றிந்த புலவர்கள் தேர்ந்துரைக்கும் சில நூல்களை மாத்திரம் சாவகாசமாய் நிதானத்தோடு ஆழ்ந்தறிந்து கற்றலே கற்றதனு லாய பயன் தருவதாகும். அகல உழுவதினும் ஆழ உழுவதே நன்றன்றோ? அங்ஙனம் உழுவதிலும் களர் நிலத்தை உழு வா ருளரோ? சாரமின்றி நிஷ்பிரயோசனமான நூல்களிற் பழகுவது வீண் காலக்ஷேபம்.

21. **பாட புத்தகம்.** — முதலில் படித்துத் தீரவேண்டிய பாட புத்தகமாக ஒரு நூலைத் தேர்ந்துகொள்ளல் வேண்டும். அதிலுள்ள விஷயங்களைச் செவ்விதின் உணர்ந்து பாடம் பண் ணுகிறவரையில் வேறெதிலும் கையிடல் ஆகாது. ஒவ் வொரு துறையையும் பற்றிய நூல்கள் பலவாக இருத்தல்கூடு மாகையால், புலமை நிரம்ப விரும்பு மாணாக்கன் அவைகளை நாளடைவில் பாராமலும் படியாமலும் திருப்தி அடையமாட் டான் என்பது உண்மையே. ஆயினும் தான் கற்க விரும் பிய சாஸ்திரத்தின் முக்கிய சாராமிசங்களைக் கற்கும்போதே பல நூல்களைப் பார்வையிடுதல் மயக்கம் எய்தற்குக் காரணமா கும். ஒருவன் இலக்கணம் கற்கப் புகுவதாக வைத்துக்கொள் வோம். ' எழுத்தும் சொல்லும் கற்பதற்கு நன்னூலும், யாப் புக் கற்பதற்கு யாப்பருங்கலக்காரிகையும், அணி கற்பதற்குத்

தண்டியலங்காரமும், அகப்பொருள் கற்பதற்கு நாற்கவிராச நம்பி யகப்பொருளும், இயற்றமி ழாசிரியரிடம் பாடங்கேட்டுத் தீரவேண்டிய புஸ்தகங்களாக வழங்கிவருகின்றன. பாடங் கேட்டுத் தீரவேண்டிய புஸ்தகங்களே யாயினும், இவை யெல்லாம் அவ்வத் துறையை ஸம்பூர்ணமாக உரைப்பன அல்ல. ஆயினும் இக்காரணம்பற்றி இவைகளை நிறைவுறப் பாடம் பண்ணுமல், நேமிநாதம் இலக்கணவிளக்கம் யாப்பருங்கல விருத்தி மாறனலங்காரம் குவலயானந்தம் தொல்காப்பியம் ஐந்திலக்கணத்தொன்னூல் இலக்கணக்கொத்து பிரயோக விவேகம் என்னும் இவைகளையும், பாட புத்தகங்களைப் படிக்கும்போது, அவற்றுடன் கூடவே வெகு விரைவாய் ஒவ்வொன்ருய்ப் படித்துவிடவேண்டும் என்பதில்லை. உரிய எல்லா அமிசங்களையும் விஷயங்களையும் பூரணமாக உரைக்கும் நூல்களைக் காண்டல் அருமை. ஒவ்வொரு நூலாசிரியனும், தான் வரையறுத்துக்கொண்ட வாறு நூலை வகுத்துரைக்கையில், பொதுவான பல அமிசங்களைத் தழுவினும், தனது கொள்கையோடு மாறுபடும் அமிசங்களையும், பிறர் கொள்கையோடு தான் மாறுபடும் அமிசங்களையும், சுருக்கியும் பெருக்கியும் விடுத்தும், நூலை அமைப்பது சகசம். எல்லா அமிசங்களும் நிரம்பிய நூல் காணக்கிடைப்பினும், ஆரம்பத்திலே தானே சாஸ்திர சம்பந்தமான விஷயங்கள் அனைத்தையும் கிரகித்தல் மாணுக்கனுக்கு அசாத்தியம். சுருக்கமான புத்தகங்களில் தக்கதொன்றைப் பாடபுத்தக மாகக் கொள்ளலே யுக்தம். அதனைச் சிறிது சிறிதாக உவாத்தியிடத்தில் பாடங்கேட்டுப் பாராயணம் செய்து, அதன் அமைதியை நன்குணர்ந்த பின்னர், அது சம்பந்தமான ஏனை நூல்களைப் பார்வையிடுதலே முறை. அவைகளைப் பாட

புத்தகம் போல் பாராட்ட வேண்டா. பாடபுத்தகத்தில் உள்ள பல அமிசங்கள் அவைகளிலும் உரைத்திருக்கும். பாட புத்தகத்தில் கண்டிராத அமிசங்களையும், பாட புத்தகத்தோடு ஒரு புடை ஒத்து ஒரு புடை முரணுதலான அமிசங்களையும், பாட புத்தகத்தோடு முற்று முரணுதலான அமிசங்களையும் குறித்துக்கொள்ளல் வேண்டும். இங்ஙனம் கற்பதில், முதனூல்களையே பாட புத்தகங்களாக முன்னர்க் கற்று, வழிநூல் சார்பு நூல்களை அப்புறம் பார்வையிடுவது தக்கதன்று. பழையன கழிதலாய்ப் புதியன புகுதலானவை யெல்லாம் சார்புநூல்களிலே காணப்படு மாதலின், சார்புநூல்களில் சிறந்ததைப் பாட புத்தகமாகக் கொண்டு, கடைசியாக முதனூல்களைப் பார்வையிடுவதே, சாஸ்திரத்தை நன்கறிவதோடு, அதன் பூர்வோத்தர கதியை நன்கறிதற்கும், எற்ற சாதன மாகும்.

22. **பார்த்தெழுதல்.**—ஒரு நூலைப் பலமுறை பார்த்தெழுதுவதில் ஒவ்வொரு வார்த்தையையும் கவனமாய்ப் பார்த்து எழுதுதல் வேண்டும். இங்ஙனம் கவனித் தெழுதுவதில், பெரும்பான்மையாய் விஷயத்தின்மீதே கவனம் செல்லுதலால், எழுதும் நோக்கம் முற்றும் சித்தியாகாது. விஷயத்தை ஒரு சிறிதும் கவனியாமல் உள்ளதை உள்ளபடியே பெயர்த்தெழுதும் இலேக்கர் தானும், ஒருநாளைக்கு எழெட்டு மணி நேரத்துக்கு மேல் தமது வேலையைத் திருப்திகரமாகச் செய்ய இயலாதென்றால், விஷயத்தையும் விஷயத்தோடு வாக்கியத்தின் போக்கையும் கவனித்தெழுதும் மாணுக்கன் ஒருநாளில் ஒரு நூலில் எவ்வளவு எழுதி முடிக்கலாம்? இங்ஙனம் ஒருமுறை எழுதிமுடிக்க

நெடுங்கால மாவதாயின், அந்நூலைப் பலமுறை பெயர்த்தெழுதிப் பாடம் பண்ணுவதற்கு எத்தனை காலம் செல்லும்? இங்ஙனம் செய்தவிடத்தும், நூல் முழுவதும் கெட்டிபாடமாக நின்றுவிடும் என்கிற நிச்சயம் இல்லை. ஆகவே இந்தப் பிரயத்தனம் மலை கல்லி எலி பிடிக்கும் அத்தனையே.

**23. பாடம் பண்ணுதல்.**—ஒரு நூலைப் பாடம் பண்ணுவதில் மாணுக்கர்கள் வெவ்வேறு முறைகளை அனுசரிக்கின்றனர். அந்நூலைப் பலமுறை பெயர்த்தெழுதுவர் சிலர். சிலர் வாய்ப்பாடமாக நெட்டுருப் பண்ணுவர். தாம் கற்கும் நூலின் அமிசங்களை ஒழுங்காக வகைப்படுத்திச் சுருக்கம் எழுதுவர் சிலர். நூலின் வார்த்தைகளைக் கவனியாமல், போக்கையும் கருத்தையும் விஷயங்களை விளக்கும் தோரணைகளையு மாத்திரமே நன்கு சிந்தித்துக்கொள்ளுவர் சிலர்.

**24. நெட்டுருப் பண்ணத்தக்கவை.**—ஒரு நூல் முழுவதையும் வாய்ப்பாடமாக நெட்டுருப் பண்ணுவதனுலும், அல்லது அதில் பெரும் பாகத்தை நெட்டுருப் பண்ணுவதனுலும், வெகுவாய் நன்மை உண்டாவதில்லை. சாஸ்திரங்களில் முக்கியமான சூத்திரங்களையும், இலக்கியங்களில் சொல்லழகு வாக்கிய நடையழகு பொருட்பொலிவு கற்பனை அலங்காரவிசேஷம் பக்தியாதி ரசம் முதலியன அமைந்துள்ள பகுதிகளையும், பலமுறை படித்து மனதில் பதியவைத்துக் கொள்வது மாணுக்கனுக்கு நன்மையே. சொல்லாற்றலும் ரசஞானமும் முதிர்தலாய்த் தான் புதுவது புனையும் நூல்களுக்கு இவைக ளெல்லாம் அனுகூல

சாதனங்கள் ஆகும். இலக்கியங்களிலும் நீதிநூல்களிலும், ஒரோவிடத்து ஒவ்வொரு வாக்கியமும், சிலவிடங்களில் ஒரு கோவையான சில பாடல்களும், சம்பாஷணையில் ஒவ்வொரு சமயத்தில் தான் விளக்கி வற்புறுத்தப் புகுந்த விஷயங்களுக்குப் பிரமாணமாக எடுத்துக்காட்ட உதவும். பொருளை அறியாமல் நெட்டுருப் பண்ணுவது கேவலம் நிஷ்பிரயோசனமான பிரயாசம். பொருளறிந்து தெளிந்தவிடத்தும், சரித்திரமும் புராணமுமான நூல்களை நெடுக நெட்டுருப் பண்ணுவது, பித்தர் செய்கையே.

25. **சுருக்கம் எழுதல்.**—கடினமான நூல்களைச் சூட்சுமமாகக் கிரகிப்பதற்கும், கிரகித்ததை மனதில் நன்கு பதியவைத்தற்கும், அந்நூல்களைச் சுருங்கப்பிடித் தெழுதலே உத்தமமான உபாயம். ஒரு நூல் தன்னளவில் ஒரு கிரமத்தை அனுசரித்ததானால், இங்ஙனம் சுருக்கம் எழுதலில் வெகுவாய்க் கஷ்டம் இராது. மாணாக்கன் அந்நூலின் ஒழுங்கையே அனுசரித்து, முக்கியமான அமிசங்களையும் உதாரணங்களையும் அதிகாரவடைவின்படி தேர்ந்துகொண்டு, அட்டவணை ரூபமாக, ஒரு விஷய சூசிகையை எழுதுவது போதும். இது செய்ய விரும்பும் தமிழ் மாணாக்கர்கள் நன்னூலைத் தொகுத்து எழுதிப் பார்க்கலாம். அந்நூலை வார்த்தை வார்த்தையாகப் பெயர்த்தெழுதுவதைக் காட்டிலும், இங்ஙனம் அதன் முக்கியாமிசங்களை ஆராய்ந்து தேடித் தேர்வதற்கும், அவைகளைச் சுருக்குவதற்கும் கொள்ளும் பிரயாசையினால், அந்நூல் மனதில் நன்றாய்ப் பதிவதன்றி, நூலின் ஒழுங்கும் அமைதியும் நன்கு கிரகிக்கப்படுதே

லால், இந்த உபாயம் மிகவும் உபயோகமானதே. ஒரு நூலின் ஒழுங்கும் அமைதியும் சுலபமாய் அறியக்கூடாத பக்ஷத்தில், அதனைச் சுருங்கப் பிடித்தெழுதுவது மாணாக்கனுக்கு மிகவும் கஷ்டசாத்தியமான காரியமே. தொல்காப்பியத்திற்குச் சுருக்கமாக விஷய சூசிகை அமைக்க முயன்று பார்த்தால் இதன் திறம் விளங்கும். ஒரு சாஸ்திரத்தைப் படிக்கும் ஆரம்ப காலத்திலே தானே இங்ஙனம் சுருக்கங்கள் அமைக்க முயல்வது யுக்த மன்று. அந்தச் சாஸ்திர சம்பந்தமான இரண்டொரு நூல்களைத் தீர்க்கமாகக் கற்றபிறகு, பெரிய நூல்களை இங்ஙனம் பாகுபாடு செய்து சுருக்கப் புகுவது நன்மை. இது செய்தாலொழிய எந்த சாஸ்திரத்தையும் ஒருவர் தீர்க்கமாகக் கற்றறிந்தவர் என்றுரைத்தல் ஆகாது. ஒரு நூலுக்கு விளக்கமாய் நன்கமைத்திருக்கும் விஷய சூசிகையைப் பலமுறை கவனிப்பதனால், நூலின் விவரங்களெல்லாம் பலமுறை நினைவில் வரும். நூலின் விஷயங்களும் மனதில் நன்றாய் நிலைத்துவிடும்.

26. சாஸ்திர அபிவிர்த்தி செய்பவர்கள், தங்கள் பாஷையிலும் பிற பாஷைகளிலும், தாங்கள் விரும்பிய சாஸ்திர சம்பந்தமான விஷயங்களை, உள்ளமட்டில் ஆராய்ந்து தெளிதல் வேண்டும். வேறு தேசங்களில் அந்த சாஸ்திரம் அடைந்துள்ள அபிவிர்த்தியில் அவசியமான அமிசங்களையும் அறிதல் வேண்டும். இங்ஙனம் அறிந்து தெளிந்த பிறகு, தம்முடைய பாஷையில் அந்த சாஸ்திரம் தற்கால நிலைமையில் எம்மாத்திரம் குறைபாடுள்ளதாக இருக்கின்றதோ என்பதைத் தேர்ந்து, அக்குறைவினை நிறைவுறுத்தல் வேண்டும். சாஸ்திர வாராய்ச்

சியில், நூல்களைக் கற்றல் மாத்திரமே சாலாது. தம்மினு மிக வுங் கற்றவரும் அநுபவமுடையவரும் ஆனவர்களிடத்தில் பல அமிசங்களைக் கேட்டுத் தெளிதல் வேண்டும். அனேக சாஸ் திரங்களை அபிவிர்த்தி செய்வதில், நமது பிரபஞ்சமே பேரா சிரியனாக இருக்கிறது. பிராகிருத தர்மங்களின் மர்மங்களைப் பரீக்ஷித்தறிதல் வேண்டும். முதலில் சாஸ்திரங்களை இயற்றிய முதனூலாசிரியர்கள், இங்ஙனம் பிராகிருத தர்மங்களையும் சுவா நுபோகங்களையும் பிறருடைய அநுபவ நிகழ்ச்சிகளையும் பரி சோதித்தே யன்றோ, அந்தந்த சாஸ்திரத்துக்கு முக்கியாதார மான விஷயங்களை வரையறுத்தார்கள். சாஸ்திர மர்மங்களை வரையறுப்பதற்குத் தேசாந்தரங்களில் செய்யும் பிரயாணமும் சிறந்த சாதனம்.

**27. தொழின் முயற்சியில் அபிவிர்த்தி.** — கல்லூரியை விட்டபிறகு, இவ்விதம் சாஸ்திராபிவிர்த்தி செய்யாவிட்டா லும், சிலர், தாங்கள் மேற்கொண்ட தொழிற்றுறையில் தீர்க்க மாக மனதைச் செலுத்தி, அந்தத் தொழிலின் திறங்களைப் பூர்வோத்தரமாக நன்குணர்ந்து, அந்தத் தொழில் மேல்மேல் விர்த்தியடைந்து சிறப்புறுதற்கும், அத்தொழில் சுலபசாத் திய மாதற்கும், அந்தத் தொழிலில் வைத்த முதற்பொருளைக் கொண்டே முன்னிலும் மிக்க பயனெய்தற்கும் ஆன மார்க் கங்களைக் கண்டுபிடிப்பதில் கண்ணுங் கருத்துமாகக் காலத்தைக் கழிக்கலாம். இவைகளெல்லாம் சாஸ்திர ஞானம் இல்லாமலும் ஆவனவல்ல. இந்த நோக்கம் உடையவர்கள், பல சாஸ்திர விற்பனர்களை உசாவியும், பல சாஸ்திரங்களை அப்பியசித்தும்,

பலவித சாஸ்திர மர்மங்களை அறியவேண்டும். இங்ஙனம் சாஸ்திர விற்பனர்களைப் பல விஷயங்களை உசாவுதலால், சாஸ்திர விற்பனரும் தத்தமக்குரிய சாஸ்திரத்தில் அதுவரையில் கண்டறியாத சில அமிசங்களைக் கண்டறிவதற்கான பரிசோதனைகளைச் செய்யத் தொடங்குவர். அங்ஙனம் செய்யும் பரிசோதனைகள், எந்த எண்ணத்துடன் செய்யப்பட்டனவோ அவ்வளவிலே நில்லாமல், வேறு பலவித நன்மைகளுக்கும் ஆதாரம் ஆதலும் கூடும். தற்காலம் ஐரோப்பியர்கள் பௌதிக ரஸாயன சாஸ்திராபிவிர்த்தியால் அடைந்துள்ள நன்மையைக் காணுமிடத்தில், அவர்கள் நம்மிலும் மிக்க வித்தியாபாரகர்களாகக் காண்கின்றனர். சில வித்தைகளை அவர்கள் ஒருகாலத்தில் நம்மிடம் கற்றனரென்று சரித்திரம் கூறுகின்றது. இப்பொழுது அவர்கள் குருவுக்கு மிஞ்சின சிஷ்யர்களாகிக் கற்றவிடத்தில் தானே தங்கள் வித்தையைக் காட்ட வந்துவிட்டனர். ஜப்பானியர் ஐரோப்பியர்களுடைய கலைகளையும் வித்தைகளையும் கற்றுத் தற்காலம் அவர்களுக்கே பூச்சிக்காட்டத் தொடங்கிவிட்டனர். நாமும் ஐரோப்பியர்களுடைய வித்தைகளைக் கற்று நம்முடைய சௌகரியங்களை மேம்படுத்திக்கொண்டு, அவர்களிடம் என்றும் நன்றி பாராட்டுவோம். காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளாவிட்டால், கதிகெட்ட கடையர்கள் ஆகிவிடுவோம்.

# செய்யுள்.

# செய்யுள்.


பக்கம்.

1. பிரவேசம் .... .... .... .... .... .... 5

## I.

2. செய்யுள்—காரணப்பெயர் .... .... .... .... ,,
3. பாவலர்—கவிஞர் .... .... .... .... .... 6
4. செய்யுளாவது மானுட சிருஷ்டியே .... .... 7
5. கவிலக்ஷணம் .... .... .... .... .... .... 8
6. கவித்துவம் .... .... .... .... .... .... 9
7. அருள்வாக்கு .... .... .... .... .... .... 10
8. கவிகள் கருவிலே திருவுடையவர் .... .... 11
9. கவி வர்க்கத்தில் சேர்ந்தவர் .... .... .... .... 12
10. உத்தம கவிகள் .... .... .... .... .... 13
11. பாவிகம் .... .... .... .... .... .... .... 14

## II.

12. குணவலங்காரங்கள் .... .... .... .... .... 15
13. நடை .... .... .... .... .... .... .... 16
14. காவியம் .... .... .... .... .... .... 17
15. மெய்ப்பாடு—சுவை .... .... .... .... .... 18
16. கவிகற்பனை .... .... .... .... .... .... 19
17. பாடுதலுற்ற பொருள் .... .... .... .... .... 20
18. செய்யுளின் உருவம் .... .... .... .... 21
19. செய்யுளின் உதயம் .... .... .... .... .... 22
20. உத்தம கவிகளின் உள்ள நோக்கம் .... .... 23

## III.

21. உத்தம கவிகளின் உானுடைப் பழம் பாடல்கள் .... 25
22. ஆதி கவிகள்—பிற்காலக் கவிகள் .... .... .... 26
23. பொது ஜனங்களின் அங்கிகாரம் .... .... .... 28
24. உத்தம கவிகளால் உண்டாகும் நன்மை .... .... 29



கம்பநாடர்.

# செய்யுள்.

1. பிரவேசம்.—ஸ்ரீமத் கம்பராமாயணத்தில் ஆரணியகாண்டத்திலே சீராமனை நோக்கி விராதன் செய்யும் துதியை முதன் முதல் ஓதும்போது எனக்கு இன்னதென்று தெரியாத ஒரு வித ஆனந்தம் உண்டாயிற்று. நாலாயிரப் பிரபந்தத்தில் சிற்சில பகுதிகளை ஓதுமிடத்தில் உண்டாகும் ஆனந்தத்தினும் இது மிகுவதாதல் உணர்ந்து, மீண்டுமீண்டும் அத்துதியை நான் ஓதுவ துண்டு. இங்ஙனமே இராமாயணத்தில் வேறு சில சந்தர்ப்பங்களிலும், புறநானூறு கலித்தொகை முதலிய சங்கத் தொகைநூல்களின் சிற்சில பாக்களிலும், இவ்விதமான கவியின்பம் உண்டாவதைப் பின்னர் நாளடைவில் உணர்ந்தேன். சில புலவர்களுடைய தனிப்பாடல்களிலும் இது பிரத்தியக்ஷ அனுபவமாக இராநின்றது. இங்ஙனம் ஜனித்தலான ஆனந்தத்துக்கு ஆதாரம் யாதோ என்று பல சந்தர்ப்பங்களில் பலகால் சிந்தித்தேன். தமிழிலும் இங்கிலீஷிலும் இது சார்பான சில நூல்களை ஆராய்ந்து பார்த்தேன். இங்ஙனம் சிந்தித்தும் ஆராய்ந்தும் குறித்துக்கொண்ட சில குறிப்புக்களை இப்போது செய்யுள் என்னும் வியாசமாக விவரிக்கிறேன்.

## I.

2. செய்யுள்—காரணப்பெயர்.—வடமொழியில் காவியம் என்பதும் யூரோப்பிய பாஷைகளில் போயெட்ரி என்பதும் தமிழில் செய்யுள் என்பதும் ஒரு பொருளனவே. தமிழில்

செய்யுள் என்பது தொழிலாகுபெயர். யூரோப்பிய பாஷை களில் போயெட்ரி என்பதும் செய்யப்பட்டது என்பதாம். வடமொழியில் காவியம் என்பது கவியாற் செய்யப்பட்டது என்பதாம். தமிழில் செய்யுள் என்பதற்கு யாப்பு-பா-பாட்டு-தொடர்பு-தூக்கு என்பன பரியாய நாமங்கள். இவைகளில் ஒவ்வொன்றும் காரணப்பெய ராதல் வெளிப்படை. ஹீப்ரு பாஷையில் கவிகளுக்குப் பார்ப்பவர் என்று பொருள்படும் பெயர் வழங்குகின்றது. இது மிகவும் பொருத்த மானதே. உலகியலை ஏனையோரிலும் கவிகள் மிக நன்றாய் ஸூக்ஷ்மித் தறிவது எவரும் உணர்ந்தபடி. தெலுங்கில் 'ரவி எருகனி தாவு கவி எருகுனு' என்னும் பழமொழி இதனை நன்கு விளக்கு கின்றது.

3. **பாவலர்-கவிஞர்.**—வடமொழியில் செய்யுளைக் கவிதா என்பதும், செய்யு ளியற்றுவோரைக் கவி என்பதும், கவிகளிற் சிறந்தோரை மஹாகவிகள் வரகவிகள் என்பதும் மரபு. தமிழி லும் அவ்வழக்கையே வழக்காகக் கொண்டு உரைப்ப தன்றி, செய்யுளைப் பா என்றும், செய்யு ளியற்றுவோரைப் பாவலர் என்றும் கவிஞர் என்றும், உத்தம கவிகளைக் கவிராயர் என்றும் கவிராசசேகரர் என்றும், உத்தமோத்தம கவிகளைத் தெய்வப்புல வர் என்றும் கவிச்சக்கரவர்த்தி என்றும் வழங்குவது மரபாக இருக்கின்றது. அவரவர்களுடைய ஆற்றலுக் கேற்றவாறு கவி களை வடமொழியில் வகுத்துள்ள நாற்பாற் பகுப்பை மேற் கொண்டு, தமிழிலும் பாவலர்களைச் சித்திரகவி, மதுரகவி, விஸ்தாரகவி, ஆசுகவி என வழங்குவது மரபாக இருக்கின்றது: இந்நால்வகைத் திறனும் ஒருசேரப் பெற்றவர்கள் சிலர், நாலு

கவிப் பெருமாள் என்றும், நாற்கவிராசநம்பி என்றும், விருது பெற்றிருப்பது பிரசித்தம்.

4. செய்யுளாவது மானுட சிருஷ்டியே என்பது இதுகாறும் கூறியவற்றால் தெளியப்படும். புலமை மிக்கவர்கள், யாதொரு கதையை உள்ளிட்டோ, அல்லது யாதோர் அகப் புறப்பொருட் டுறையை உள்ளிட்டோ, தாங்கள் வழங்குதலான மொழியில் அமைக்கும் பாடலே செய்யுள் என்பதாம். இது, செய்யுளியலில் தொல்காப்பியர்

எழுத்து முதலா வீண்டிய வடியில்
குறித்த பொருளை முடிய நாட்டல்
யாப்பென மொழிப யாப்பறி புலவர்

என உரைத்ததனால் உணர்தலாகும். பிரகிருதியில் (பிரமனுடைய) சீவ சிருஷ்டியைப் போன்றது கவிகளின் கவிதா சிருஷ்டி என்னும் கருத்தை உள்ளிட்டு, நன்னூலில்

பல்வகைத் தாதுவின் உயிர்க்குடல் போற்பல
சொல்லாற் பொருட்கிட னாக உணர்வினின்
வல்லோ ரணிபெறச் செய்வன செய்யுள்

என விளக்கினர் பவணந்தி முனிவர். பிரமனையும் கவிகளையும் சீர்தூக்கிக் குமரகுருபரர்

கலைமகள் வாழ்க்கை முகத்த தெனினும்
மலரவன் வண்டமிழோர்க் கொவ்வான் — மலரவன்செய்
வெற்றுடம்பு மாய்வனபோல் மாயா புகழ்கொண்டு
மற்றிவர் செய்யு முடம்பு

எனக் கூறினர்.

**5. கவிலக்ஷணம்.**—கோவிந்த சதகம் பாடினவர் 'பாவுக் கழகு பொருட்சுவை சொற்சுவை' என்றார். 'சந்த மில்லாக் கவிக்கு அந்த மில்லை' என்றது ஒரு பழமொழி. ஒரு வித்தி யார்த்தி யானவன் பரீக்ஷையில் செய்யுள் சம்பந்தமாக எழு திய ஒரு வியாசத்தில் 'பா பாதி பண் பாதி' என வரைந்திருக் கின்றனன். கம்பநாடர், 'கவிப்பா வமுதம் இசையின் கறி யொடு கண்ணனுண்ணக் குவிப்பான்' எனச் சடகோபரைப் புகழ்வதும் இக்கருத்தே பற்றி யன்றோ? அறப்பளீசுர சதகத்தில், உதவியின்றிக் கெடுவனவற்றில், 'வருமெதுகை மோனையில் லாத கவியும்' ஒன்றாக உரைத்திருக்கின்றது. 'அணியிலாக் கவிதை பணியிலா வனிதை' என்றார் அகத்தியர். உத்தம கவி லக்ஷணத்தை,

> எற்பொரு நாகர்தம் இருக்கை யீதெனக்
> கிற்பதோர் காட்சிய தெனினும் கீழுறக்
> கற்பக மனையவக் கவிஞர் நாட்டிய
> சொற்பொரு ளாமெனத் தோன்றல் சான்றது

எனப் பம்பைப் பொய்கையை வருணிக்கின்ற இடத்திலும், அதம கவிலக்ஷணத்தை

> அகழி
> பொன்விலை மகளிர் மனமெனக் கீழ்போய்ப் புன்கவி யெனத்
> தெளி வின்றி

என அகழியை வருணிக்கின்ற இடத்திலும் விளக்கிய கம்பர், கோதாவிரி நதியின் வருணனையில்,

புவியினுக் கணியாய் ஆன்ற பொருள்தந்த புலத்திற் றாகி
அவியகத் துறைகள் தாங்கி ஐந்திணை நெறிய ளாவிச்
சவியுறத் தெளிந்து தண்ணென் றொழுக்கமுந் தழுவிச் சான்றோர்
கவியெனக் கிடந்த கோதா விரியினை வீரர் கண்டார்

என அவ்வாற்றையும் சான்றோர் கவியையும் சிலேடையுவமை யாக அமைத்துக் கூறியிருப்பதில் கவிலக்ஷணம் இன்ன தென்பது அறியக்கிடக்கின்றது. அஃதாவது 'பூமிக்கெல்லாம் அலங்காரமாய் நிறைந்த அர்த்தங்களைக் கொடுத்து அறிவின் கண்ணே நிகழ்வதாய்த் தேவாமிர்தம்போன்ற அகப்பொருளின் பல துறைகளைத் தாங்கி மற்றும் ஐந்திணைப் பொருணெறிகளைச் சேர்ந்து விளக்கமும் தெளிவும் உள்ளதாய்த் தண்மையான நல்லொழுக்கம் அல்லது சொன்னடை உள்ளது' என்பதாம்.

6. கவித்துவம்.—காரிகை கற்றுக் கவிபாடுவார் சிலர் எக்காலத்தும் உண்டு. அவர்கள் கவிஞர் வரிசையில் வைத்தெண்ணுதற்கு உரியரல்லர். 'காரிகை கற்றுக் கவி பாடுவதினும் பேரிகை கொட்டிப் பிழைப்பது நன்று.' மகாகவிகள் யாப்பிலக்கணம் கற்றுக் கவிபாடுவதாக எம்மொழியிலும் யாதொரு வரலாறும் வழங்கவில்லை. 'தலைச்சன் பிள்ளை பெற்றவளுக்குத் தாலாட்டும், அகமுடையான் செத்தவளுக்கு அழுகையும் தானே வரும்.' திருவாய்மொழியின் வியாக்கியான அவதாரிகையில் பின்வருமாறு உரைத்திருக்கின்றது. 'இப்படி பகவத் ஸ்வரூப ரூப குண விபூதிகளை விசத விசததர விசததமமாக அநுபவித்து அங்குள்ளடங்காமை வழிந்து புறப்பட்ட சொல்லாயிற்று இப்ர

பந்தங்கள்; இங்ஙனே யாகில், இப்ரபந்தங்களுக்குப் பாட்டும் ஸங்க்யையும் பாட்டுக்கு நாலடி யாகையும் அக்ஷரங்கள் ஸம மாகையும் 'எழுத்தசை சீர் பந்த மடி தொடை பாவினம்' என்றாற் போலச் சொல்லுகிற ப்ரபந்த லக்ஷணங்கள் சேர விழுந்தபடி எங்ஙனே யென்னில், சோக வேகத்தாலே பிறந்த 'மாநிஷாத' இத்யாதி சுலோக மானது 'மச்சாதா தேவ' என் கிற சுலோகத்தின் படியே, அத்திக்காயி லறுமான் போலே, பகவத் விபூதியில் ஏகதேசஸ்தனான ப்ரஹ்மாவின் ப்ரஸாதத் தாலே ஸர்வ லக்ஷணோ பேத மானாற்போலே, பகவத் ப்ரஸாத மடியாகப் பிறந்த இப்ரபந்தங்களுக்கு இவற்றில் கூடாத தில்லை.

7. அருள்வாக்கு.—நம்மாழ்வாரே திருவிருத்தத்தில்

மெல்லியலாக்கைக்கிருமிக்குருவின்மிளிர்தந்தாங்கே
செல்லியசெல்கைத்துலகையென்காணும்என்னானுந்தன்னைச்
சொல்லியசூழற்றிருமாலவன்கவியாதுகற்றேன்
பல்லியின்சொல்லும்சொல்லாக்கொள்வதோவுண்டுபண்டுபண்டே

என்றும், தொண்ணூற்றேழாந் திருவாய்மொழியில்

பண்ணார் பாட லின்கவிகள் யானாய்த் தன்னைத் தான்பாடித்
தென்னா வென்னு மென்னம்மான் திருமா லிருஞ்சோ லையானே

என்றும் (இக்கருத்தை இன்னும் வேறிடங்களிலும் குறித்துக்) கூறியிருக்கின்றனர். தங்கள் தங்கள் உபாசனா மூர்த்தியின் அருளாலே பாடல்கள் புறப்படுகின்றன என்றும் அப்படிப் பட்டவை அருள் வாக்கு என்றும் நம்மவர்கள் நம்புகின்றனர். கம்பநாடர் முதலியோர் கலைமகள் அருளால் கவிபாடலாம் என்று நம்பினதாகக் காண்கின்றது. சரஸ்வதியந்தாதியில்

படிக நிறமும் பவளச்செவ் வாயும்
கடிகமழ்பூந் தாமரைபோற் கையும்—துடியிடையும்
அல்லும் பகலும் அனவரத முந்துதித்தால்
கல்லுஞ்சொல் லாதோ கவி

என்றும்,

பாவுந் தொடையும் பதங்களுஞ் சீரும் பலவிதமா
மேவுங் கலைகள் விதிப்பாள்

என்றும், கம்பர் பாடியிருக்கின்றனர். இராமாயணத்தில் யாதேனும் ஆக்ஷேபனை கேட்பவர்களை நோக்கி, 'நானும் அறியேன், அவளும் பொய் சொல்லாள்' எனக் கம்பர் கூறுவரென்று ஆசிரிய பரம்பரையிற் கேட்டுவருகிறோம். இங்ஙனம் கூறினவர்,

பித்தர் சொன்னவும் பேதையர் சொன்னவும்
பத்தர் சொன்னவும் பன்னப் பெறுபவோ

என்றது பொருந்துமா றெவன்? கவித்துவத்தின் மர்மம் கவிகளுக்கே புலனாகாத திரிபுடைத்துப் போலும். 'கம்பன் வீட்டுக் கட்டுத்தறியுங் கவிபாடும்' என்று வழங்கும் பழமொழியின் கருத்து, மகா கவிகளுடைய சகவாசத்தால் சாதாரணர்களும் ஒருவாறு கவித்துவம் அடைவர் என்பதே.

8. **கவிகள் கருவிலே திருவுடையவர்.** — மன்பதைகளில் எல்லாருமே எவ்வகைத் தொழிலையும் செய்யக்கூடும் என்பதில்லை. 'எல்லார்க்கும் ஒவ்வொன் றெளிது.' ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு தொழிலுக்கேற்ற இயற்கை யமைப்பு இருக்கும். அதை யறிந்து அவரவர் அவ்வத்தொழிலில் பிரவேசித்

தால், பல தொழில்களும் செவ்வி பெற்று நடக்கும். கையும் விரல்களும் மிருதுவாய்ச் சிறியனவாய் இருப்பவர்கள் மருத்துவச்சி வேலைக் கேற்றவ ராவர். சுருதிலயை உணர்ச்சியோடு நல்ல சாரீரமும் பெற்றவர்கள் ஸங்கீத ஸாஹித்திய ராவர். கல்வியறிவோடு உயரமும் காத்திரமுமான உடல் பெற்றவர்கள் உவாத்திமைத் தொழிலுக்கு உரிய ராவர். 'திருடன் இராஜ விழி விழிப்பானா?' 'கொட்டிக்கிழங்கு வெட்டுகிறவனுக்குக் கோயிலில் வந்து ஆடத் தெரியுமா?' 'நெல்லுக் குற்றுகிறவனுக்குக் கல்லுப் பரீக்ஷை தெரியுமா?' கருவிலே திருவில்லாதவர்களைக் கவிபாடச் சொல்வது, 'கூலிக்குக் குற்றுகிறவளைக் கேளிக்கை ஆடச் சொல்வது' போலாம். கவனசக்தி உள்ளவர்க ளிடத்தில் கவிகள் தாமாகவே சுரக்கும். 'தெய்வப் புலவனுக்கு நா உணரும்; சித்திரவோடாவிக்குக் கை உணரும்.'

9. **கவி வர்க்கத்தில் சேர்ந்தவர்.**—நிகண்டு வாகடம் சோதிடம் முதலியன, ஞாபக நிமித்தமாக, எதுகை மோனையுடனே பாட்டில் அமைக்கப்பட்டு வந்தன வேனும், அவைகளில் கவித்துவம் என்பது ஒன்றும் இல்லை. யாப்பருங்கலம் காரிகை முதலிய இலக்கணங்களில் சொல்லியிருக்கும் விதிகளை யெல்லாம், இலக்கியப் பயிற்சியுள்ள ஒருவன், இரண்டொரு நாளில் அறிந்துகொள்ளக் கூடியனவே. அவ்விதிகளை அறிந்த எவனும் சாஸ்திர விஷயங்களை ஞாபக நிமித்தமாக எதுகை மோனையுடனே பாட்டில் அமைக்கலாம். எப்படியும் சதுரகராதியில் எதுகை யகராதியும் ஒன்று ஏற்பட் டிருப்பதனால், எதுகை விஷயத்தில் யாதொரு கஷ்டமும் இல்லை. இன்ன பொருளை

இத்திறப் பாட்டில் இன்ன விதமாக அமைக்க என்ற வளவிலே, அங்ஙனமே அமைத்துக் கொடுக்கின்ற ஆசுகவிகள், அந்த வித்தையை அப்பியாசம் பண்ணினவரே யாவர். கூடசதுக்கம் கோமூத்திரி நாகபந்தம் முரசபந்தம் முதலான சித்திரகவிகளைப் பாடுவதும், அப்பியாச வித்தையே யாகும். மதுரகவிகளும் விஸ்தாரகவிகளுமே கவிவர்க்கத்தில் சேர்ந்தவர்கள். தொடர் நிலைச் செய்யுள் பாடவல்லவர்கள் அகலகவிகள் அல்லது வித்தாரகவிகள் எனப் பெறுவர்.* ஓசையும் பொருளும் இனிதாய் முழுதுஞ் செஞ்சொல்லாய் அலங்காரமும் தொடையும் தெற்றென்று கேட்டார் துதிக்கும்படி பாடுவது மதுரகவி லக்ஷணம்.

> எடுத்த பொருளினொ டோசை யினிதாய்
> அடுத்தவைசெஞ் சொல்லாய் அணியும்—தொடுத்த
> தொடையும் விளங்க அவைதுதிப்பச் சொல்லின்
> இடமுடைய மாமதுர யாப்பு

என்றார் பாட்டியலார்.

10. **உத்தம கவிகள்.**—யாப்பு மாத்திரம் கற்றுக் கவி பாடுவோர் கவிகள் ஆகார். கவிகள் கருவிலே திருவுடையவர். பழைய காவியங்களை வாசிப்பதும், யாப்பிலக்கணம் அறிவதும், அவர்கட்கு ஒருவாறு துணைக்கருவிகளே ஆகும். கல்விப் பயிற்சி கவித்துவத்தைப் பின்னும் மேம்படுத்துமே யன்றிக் கவித்துவத்தை உண்டாக்க மாட்டாது. கல்வியிற் பெரிய கம்பர் போன்ற கனகவிகளும் உளர். ஷேக்ஸ்பியர் போலே கல்விப்பயிற்சி வெகுவாய் இல்லாத மஹாகவிகளும் உளர். உலகியலை நன்குணர்ந்து ரஸஞானம் விசேஷித்த மதியூகிக ளாகை

யால், அவர்களுடைய கவித்துவம் தன்னுற்றலே ஆற்றலாக ஒளிர்வதாகும். கற்ற வித்தையைக் காய்ச்சிக் குடிக்கலாம்: கவித்துவம் அது செய்யலாவ தன்று. உள்ளடங்கா மகிழ்ச்சி யாலும் உள்ளக் கொதிப்பினுலும் உதிப்பதே உத்தம கவிதை; உலகிற் பொருள்களைக் கண்ணடி யன்றிக் கல்லும் சுவரும் பிரதிபிம்பிப்ப தில்லை. உலகவியற்கையைக் கவிதையாகிய கண்ணடியால் பிரதிபிம்பிக்கச் செய்பவர்களே உத்தம கவிகள். உலகவியற்கை என்பது பிரகிர்தி. மனுஷப் பிரகிர்தியையும், தேவசிருஷ்டியில் கேவலருக்கு விளங்காத பிரகிர்தி விசேஷங் களையும், உத்தமமான உலகநீதிகளையும், சுவைபட உரைப் பதே, கவிலக்ஷணமாம்.

11. பாவிகம்.—'பாவிகமென்பது காப்பியப் பண்பு.' அஃதா வது "ஒரு காப்பிய முற்றிலும் கவியின் கருத்தால் அமைந்த தோர் பண்பு. என்ருல், நூலில் தலைமையாக நின்ற சரித்திர மும், அதனைப் பற்றித் தொடர்ந்த சரித்திரமும், ஆகிய இவற் ருல், கவி கருதிய திறம் விளங்கும் வனப்பு என்றவாறு. இராமா யணத்தில், பிரதானமான இராம சரித்திரத்தினுலும், அதைத் தொடர்ந்த வாலி சுக்கிரீவாதி சரித்திரத்தினுலும், சத்தியமும் தருமமும் கருணையும் வீரமும் கற்புநிலையும் உடன்பிறந்தோ ரொற்றுமையும் பழியச்சமும் அதருமத்தின் விளைவும் இழிசன ரியற்கையும் முதலியன, கவி கருதியாங்கு அமைந்து தோன் றுவதை, உதாரணமாகக் கண்டுகொள்க" (தண்டியலங்காரசா ரம்). இனி "உலகிலும் இயற்கையான் நிலைபெருது, புலவ ரான் இல்லது இனியது நல்லதெனக் காட்டப்பட்டதோர்

ஒழுக்கம்" என்பதும் இதன்பாற் படும். ஆயினும் "நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும், பாடல் சான்ற புலனெறி வழக்கம்" என்பதை, "புனைந்துரை வகையானும் உலக வழக்கத் தானும் புலவராற் பாடுதற்கமைந்த புலவராற்று வழக்கம்" என விளக்கி, "இல்லது கூறுதல் தொல்லாசிரியர் தமிழ் வழக் கன்று. புனைந்துரை வகையால் புலவர் இல்லனவுங் கூறுப வென்னின், உலகத்தோர்க்கு நன்மை பயத்தற்கு, நல்லோர்க் குள் ளனவற்றை ஒழிந்தோர் அறிந்தொழுகுதல் அறமெனக் கருதி, நல்லோர்க் குள்ளனவற்றில் சிறிது இல்லனவும் கூறுதலன்றி, யாண்டும் எஞ்ஞான்றும் இல்லன கூறார், இல்லதென்று கேட் டோர்க்கு மெய்ப்பாடு பிறந்து இன்பஞ் செய்யாதாகலின். உலகியலாவது எவ்விடத்தும் எக்காலத்தும் ஒப்ப நிகழ்வது" என்பர் நச்சினார்க்கினியர்.

## II.

12. **குணவலங்காரங்கள்.**—"செய்யுள் என்பது விழுமிய பொருள் கொண்டு விளங்கிய சொற்றொடையாம். விழுமிய பொருளாவது:—'உனக்கு மகன் பிறந்தான்,' 'உன் பகைவன் பட்டான்' என்னும் இத்திறத்த வாக்கியங்களால் விளையும் இன் பத்தினும் வேறாயதோர் பேரின்பம் விளைப்பது. இதனை விளக்குவன குணமும் அலங்காரமுமாம். ஆகவே செய்யுளுக்கு அப்பொருள் உயிரும் சொற்றொடை உடம்பும் குணவலங் காரங்கள் அழகு செய்வனவுமாம் என்பது பெறப்படும். இதனை உள்ளிட்டே பவணந்திமுனிவர் 'பல்வகைத் தாதுவி னுயிர்க்குடல் போற்பல, சொல்லாற் பொருட்கிட னாக வுணர் வினின், வல்லோ ரணிபெறச் செய்வன செய்யுள்' என்று கூறி

ஞர்" (தண்டியலங்காரசாரம்). குணவலங்காரங்கள் என்பதில் குணம் என்பது குணவணி; அலங்காரம் என்பது சொல்லணியும் பொருளணியுமாம். தொடைகளைப் பற்றிநின்று அழகு செய்வன குணவணிகள்; சொல்லையும் பொருளையும் பற்றிநின்று அழகுசெய்வன சொல்லணியாகிய அலங்காரங்கள்: இளமை முதலியனபோல் ஒற்றுமை நயத்தினின்று அழகு செய்வன அவை; கடக குண்டலாதிகளைப் போல வேற்றுமை நயத்தினின்று அழகு செய்வன இவை. ஒருவனுக்குள்ள திண்மை இளமை முதலிய தேக குணங்களும், தயை தைரியம் முதலிய ஆத்தும குணங்களும், அவனை விளக்குவதுபோல், குணவணிகள் செய்யுளை விளக்குகின்றன. இளமை நீங்கிய உடம்பில் ஆபரணங்கள் விளங்காமை போல், குணவணிகள் இல்லாக் கவிகளில் உவமை முதலிய அலங்காரங்கள் விளங்கா. தக்கபடியே குணவலங்காரங்கள் அமைந்துள்ள செய்யுளால் ஜனிக்கின்ற இன்பமானது, அவ்வகைச் செய்யுளைப் படிக்கும்படி உற்சாகத்தை உண்டுபண்ணுகின்றது. அவ்வின்பம் மனத்தை விட் டகல்வதில்லை.

13. **நடை.** — குணவணியாவது வாக்கியமாகிய முடியின் நடையை நோக்கியது. இது நெறி யெனவும் பாக மெனவும் படும். அஃதாவது கவியமைப்புவகை என்பதாம். கவியமைப்பில் ஓசையுடைமையும் ஆழமுடைமையும் இருத்தல் வேண்டும். பொருள் அழுத்தமும் சொல்வன்மையும் அமைந்து நடைமிடுக்காக இருப்பதைப் புலவர்கள் போற்றுவ தில்லை. சொல்வன்மை யின்றிப் பொருள் எளிதில் விளங்குவதான செய்யுள்

நடையே சிறந்த தென்பது புலவர் துணிபு. வல்லினமும் தொகைநிலைத்தொடர்களும் மிகுத லின்றி, வலிமெலியிடைகளும் நெடில் குறில்களும் கலந்து, செவிக்கின்பம் தரத்தக்க சொற்கள் வரத் தொடுத்தலால், வாக்கியங்கள், தேனாறு பாய்ச்சலாய், இனிமை பயக்கும். ஒவ்வொரு வாக்கியத்திலும் கருதிய பொருள் தெளிவாகப் புலப்படுவதற்கு வேண்டிய சொற்கள் அமைந்திருத்தல் வேண்டும். ஒரு பொருளைப் புகழுமிடத்து அசம்பாவிதமாய் உலகவொழுக்கத்துக்கு விரோதமாகக் கூறாமல் உலக வியற்கைக் கியையப் புகழ்வதே சிறப்பாகும். குறிப்பினாலே ஒரு சிறப்பு விளக்கும் பொருள்படப் பாடுவது உசிதம். சொல்லணி பொருளணியான அலங்காரங்களைக் கொள்ளுமளவாக இடமறிந்து ஏற்றபெற்றி அமைப்ப தன்றி, அமிதமாக அமைப்பது அருவருப்பே தருவதாகும்.

14. **காவியம்.**—கவி செய்வ தெல்லாம் காவியமே யாயினும், தமிழில் உலா மடல் கலம்பகம் பரணி ஆற்றுப்படை முதலான தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களும் சிறு காவியங்கள் எனப்படும். (தன்னிக ரில்லாத் தலைவன் வரலாறு உரைப்பதாய், பல வருணனைகள் உள்ளதாய், ஒருதிறப் பாட்டாலேனும் பலதிறப் பாட்டாலேனும் அமைக்கப்பட்டு, மெய்ப்பாடும் சுவையும் தோன்ற நிற்பது பெருங்காப்பியம் எனப்படும். சிலப்பதிகாரம்—மணிமேகலை—சிந்தாமணி—கம்பராமாயணம் என்றாற்போல்வன இதற்கு உதாரணம்.) "உலகவியல் பறிதலும் ரஞ்சனையும் காப்பியத்திற்குப் பயன் என்பவாதலின் பல வருணனைகள் வேண்டுவனவாயின. 'தன்னிக ரில்லாத் தலைவன்'

என்ற கருத்து, ஒப்புயர் வில்லாத நற்குண நற்செய்கைக ளுடைய தலைவன் மேல் பிரபந்தம் இசைத்தல் இம்மை மறு மைக்கு உறுதி பயக்கும் என்பதாம். இப்படிப்பட்ட தலைவன் மேம்பாட்டைச் சிறப்பிப்ப தாயின், இழிந்தோன் சிறப்பும் கூறற் குரியது."

15. மெய்ப்பாடு–சுவை.—சிறுகாப்பிய மாயினும், பெருங் காப்பிய மாயினும், மெய்ப்பாடும் சுவையும் தோன்ற நிற்பதே செய்யுட்குச் சிறப்பிலக்கணம். மெய்ப்பாடாவது பொருட் பாடு. அஃதாவது உய்த்துணர்ச்சி யின்றி அவ்விடத்து வந்த பொருளானே சொல்லப்படும் பொருள், தானே வெளிப்பட் டாங்கு, கண்ணீரரும்பல் மெய்ம்மயிர்சிலிர்த்தல் முதலாகிய சத்துவம் படுமாற்றான் வெளிப்படச் செய்வது. "மெய்ப்பா டென்பது புறத்துக் கண்டதோர் பொருள் காரணமாக நெஞ் சின்கண் தோன்றிய விகாரத்தின் விளைவு" என்பர் பேரா சிரியர். வடநூலில் பாவம் என்பது இதுவே. இதற்கு மன நிலை என்பது பொருள். சத்துவங்க ளெல்லாம் பிறரிடத் துள்ள சுகதுக்கங்களைத் தமவாகப் பாவித்தலால் வருவன. சுவையாவது வடநூலில் ரசம் எனப்படுவது: சந்தோஷத்தை உண்டாக்குவது என்பதாம். சுவைகளுக்கு மெய்ப்பாடுகளே அடிபாம். "இவை நாடகத்திலும் காவியத்திலும் செய்திறத் தினுலும் சொற்றிறத்தினுலும் தூண்டப்பட்ட வாசனையின் திண்மையால் தம்மவையே போல அநுபவ நிலையில் வந்து ஆனந்த மயமாகவே நிற்பன." ஆகவே பாவனா சக்தியால் சுவை விளைப்பதே கவி லக்ஷணமாகும். பாவனா சக்திக்குக் கற்பனாசக்தி என்றும் ஒரு பரியாய நாமம் உண்டு.

16. கவிகற்பனை.—கற்பித்தல் என்பது நியமித்தல் பிறப்பித்தல் என்பதாம். கற்பனை என்பது இல்லதை உள்ளதாக உண்டு பண்ணல். கவிகற்பனை என்பது ஒரு பொருளில் கவியானவன் தனது சாதுரியத்தால் முன்னில்லாத சுவையைப் பிறப்பித்தல். பொய்யும் புனைந்துரையும் கவிகற்பனை யன்று. கட்டுக்கூட்டாய் மனம்போன போக்கிலே உரைப்பதும் கவிகற்பனை யன்று. உத்பிரேட்சை மாத்திரமுமே கற்பனை யன்று. வர்ணியங்களை உள்ளது உள்ளபடியே உரைப்பது வசனத்திலும் வசன ரூபமான சரித்திரத்திலும். கவிகற்பனை கலந்த போது மாத்திரமே கத்தியமும் கத்திய ரூபமான சரித்திரமும் பத்திய மாவது. வர்ணியத்தை விளக்கும் பொருட்டுப் பிரகிர்தியிலும் பிரகிர்தி சம்பவங்களிலும் மற்றவர்களுக்குக் கட்புலனாகாத ஒற்றுமை வேற்றுமைகளை எடுத்துக் காட்டுவதும், வர்ணியங்களின் அந்தர்ப்பாவ சூட்சுமங்களைப் பலரும் அறிந்து வியக்குமாறு சித்திரித்துக் காட்டுவதும், சந்தர்ப்பங்களுக் கேற்றபடி கவியானவன் தற்குறிப்பேற்றி யுரைப்பதும், 'அப்பத்தை எப்படி சுட்டாளோ அதற்குள்ளே தித்திப்பை எப்படி நுழைத்தாளோ?' என்று அதிசயிப்பவனைப்போல, சொற்களை இந்தக் கவி எப்படி அமைத்தானோ அதில் ஆனந்த ரஸத்தை எப்படி ஏற்றினானோ என்று படிப்பவர் அதிசயிக்கும்படி செய்வதும் முதலான சாதுரியங்கள், கற்பனா சக்தியின் கூறுபாடுகளாம். பகுத்தறிவுக்கும் கற்பனா சக்திக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை. ஏனையரிடத்தில் காணப்படாத கவியூகை ஒருவனிடத்தில் சுவபாவமாய் எவ்வளவுக் கெவ்வளவு அமைந்திருக்கிறதோ, அவ்வளவுக் கவ்வளவாக அவன் கவித்துவம் சிறப்புறுகின்

19. **செய்யுளின் உதயம்.**—உரிய காலத்தில் கரு தரித்தாலும், கருவானது கர்ப்பாசயத்தில் முதலில் பிண்டாகிருதியாக ஊறி வளர்ந்து, தாயின் உடலி லிருந்து சாரத்தைக் கிரகித்து, நாளடைவில் அவயவங்கள் பூரணமாகி, பத்து மாதமும் நிறைந்த பிறகே சிசுவாக உதிக்கின்றது. பத்து மாதமும் நிறைவதற்கு முன்னே உதித்தலான பிள்ளைகள் உடலுரம் பெற்று நீடு வாழ்வது அருமை. உதித்தலான காலத்தில் உதிக்க வொட்டாமல் தடை நேர்வதும் சிசுவின் அங்க லக்ஷணம் அழிவதற்குக் காரணமாகும். கவி தான் உட்கொள்ளும் பொருளும், முதலில் பிண்டாகிருதியாகவே மனத்தில் ஊறியிருந்து சாரம் பெற்று வளர்ந்து, நாளடைவில் தனது திறத்துக்கும் மனத் திட்பத்துக்கும் ஏற்றவாறாக, உருவும் அழகும் நிறைந்து செய்யுளாக உதிக்கும். உதிக்கின்ற காலத்தில் கவியானவன் அதனை எட்டில் ஏற்றுக்கொள்ளவேண்டும். அதுவாக உதிப்பதற்கு முன்னே அவசரப்பட்டாலும் அது சீர்கெட்டு அழிவதாகும். அதுவாக உதிக்கின்ற சமயத்தில் அதனை எட்டில் ஏந்திக்கொள்ளாமல் காலதாமதம் பண்ணினாலும், அதன் அருமையும் பெருமையும் குலைந்து போகும். உதிக்கின்ற சமய மறிந்து பெற்றதனால் தான், கம்பராமாயணம் அழகும் ஆயுளும் பெறுவ தாயிற்று. அறுசுவைப் பண்டமும் நீரும், தீயின் வெப்பத்தால் கொதித்துக் கலந்து சமரசப்படுகின்ற சமயத்தில், குய்ப்புகை யெழுப்பி இறக்கிவிட்டால், அட்ட உண்டியானது, அருந்துவோர்க்கு இன்பம் தருகின்றது. சமரசப்படுவதற்கு முன்னே இறக்கி விட்டாலும், பின்னே இறக்கினாலும், அவ்வுண்டி பதங்கெட்டுப் பாழாய் விடுகின்றது. தாங்கள் சமைக்கும் கவியமுதைக்

கவிகள் பதம் பார்த்து எட்டில் இறக்கிக்கொள்ளவேண்டும். கருக்காயும் உண்ண இயைவ தன்று: பக்குவம் முதிர்ந்த பழமும் உண்ண இயைவ தன்று. பருவகாலத்தில் கவியின் மனத்திலிருந்து தானாகக் கனிந்து விழுகின்ற பழமே உண்ணவுண்ணத் தெவிட்டாது பின்னும் உண்ணுதலான விருப்பத்தை எழுவிப்ப தாகும்.

20. **உத்தம கவிகளின் உள்ள நோக்கம்.**—கவனம் செய்வதில் கவிகள் கருதியிருக்கும் நோக்கம் யாது? கருக்கொண்டவள் கரு முதிர்ந்த அளவிலே கருவுயிர்ப்பது இயற்கை. அவள் யாதொரு நோக்கத்தோடு கருவுயிர்க்கிறாள் என்பதில்லை. கருக்காய் முதிர்ந்து கனிந்த கனியானது, தானே உதிர்வதல்லது, யாதொரு நிமித்தம் கருதி உதிர்வதில்லை. கவியின் மனத்தை இடங்கொண்ட பொருளானது, கவிகற்பனையால் கனித லானபோது, கவிதா ரூபமாகத் தானே உதிர்வதல்லது, யாதொரு நோக்கத்துடனே உதிர்கின்ற தென்ப தில்லை. இது தனிப்பாடல்களின் திறத்தில் உள்ளபடி. தனிப்பாடல்களிலும், சிறுகாப்பியமான பிரபந்தங்களிலும், கவியானவன், கருத்திற் கொண்ட பொருளில் துவக்குண்டு, அதன் வயத்தனாய், அதுவே நோக்கமாய், அப்பொருளின் திறத்தில் தனக்குக் கட்புலனான உண்மைகளும் விசேஷ அம்சங்களும் கற்பனையால் கற்பிதமான உருவத்துடன் கவிதையைக் கருவுயிர்ப்ப தன்றித் தான் யாதொரு நோக்கத்துடன் கவனம் செய்வதில்லை கருத்திற் கொண்ட பொருளின் காட்சியே மனத்தைக் கவர்தலால், அந்தக் காட்சியாலும் அது கவிதாரூபமாகப் புறப்படு

கின்ற விதத்தாலும் ஜனித்து நிறைதலான ஆனந்தமானது, அவன் மனத்தில் வேறு நோக்கங்கள் பிரவேசிப்பதற்கு இடம் கொடாது. ஆயினும், அந்த ஆனந்தமானது நீடித்திருக்காது. தொடர்நிலைச் செய்யுளான காவியங்களைக் கவனம் செய்யும் போது, அவ்வானந்த மேலீட்டின் கொதிப்பானது சிறிது சிறிது தணிதலுறும். அந்த ஆனந்தம் முற்றும் தணியாமல் நீடுதல் வேண்டின விடத்து, யாதொரு நோக்கமும் இன்றி அதனை நீட்டித்தல் இயலாது. பெருங்காப்பியத்தைக் கவனம் செய்பவன், தன் காவியமானது கல்விமான்களுக்கு வித்தியா விநோதமாக இருக்கும் என்கிற அவ்வளவிலே அமைவு கொள்ளான். மானுடப் பிரகிர்தியை மேம்படுத்தத் தக்கனவென்று தான் பிரத்தியக்ஷ அனுபவத்தில் கண்ட நற்குண நல்லொழுக்கங்களைச் சுரோதாக்களிடத்திலே தனது காப்பியம் எழுவிக்க வேண்டும் என்கின்ற நோக்கம் உண்டாவது ஒருதலை. காப்பியப் பண்பான இந்தப் பாவிகம் இல்லாதவிடத்தில் ஒருவன் இயற்றும் காவியமானது உயிரில்லாத உடம்பே. இம்மை நலங்களையே பெரிதாகக் கொண்டு அவற்றில் ஈடுபட் டழிகின்ற மன்னுயிர்களை உய்விக்குமாறு, உலகநிலையாமை யாக்கைநிலையாமை செல்வநிலையாமை முதலியவற்றைக் காட்டி, உலகமாயையினால் மறைவுண் டிருக்கும் ஆன்ம விசேஷங்களை விளக்கி, உலகில் எளியாரை வலியார் நலியாமல் எல்லோரும் அறத்தாற்றிற் பொருளீட்டி இன்பநுகர்ந்து வீடடையு மாறு ஹிதோபதேசம் செய்வதே, உத்தம கவிகளின் உள்ளநோக்கமாகும். இஃது எம்மதத்தினர்க்கும் சம்மதமான நோக்கமே. ஆகவே, இவ்வளவில் மகா கவிகளுடைய காவியங்களானவை,

முப்பாலாம், மிருதியாம், மதரஹஸ்யமாம், பதிசாத்திரமாம்: உள்ளதை உரைக்குமிடத்தில் எல்லாருடைய வேதாந்தமுமாம். "அறம்பொரு ளின்பம் வீடடைத னூற்பயனே" யாகையால், சுரோதாக்கள் கவிநோக்கத்தை நிறைவுறுத்துவதே பயனும். ஒவ்வொரு காவியமும், ஒரு தேயத்தினர் ஒரு கால விசேஷத்திலே நாடுதலான நாட்டத்தையும் கொள்ளுதலான பாவனையையும் விளக்குவதாய், அளவாற் பெரிதாயிருப்பதனாலே, காவியம் இயற்றுதற்கு மிகவும் கௌரவமான கருத்துக்களின் மிகுதி அவசியமாகின்றது. இவ்வருமை வாய்வது அரிதாதலினன்றோ, உலகில் நடையாடும் காவியங்கள் சிலவாய் விரல் விட் டெண்ணத்தக்கனவாகவே இருக்கின்றன.

## III.

21. **உத்தம கவிகளின் ஊனுடைப் பழம் பாடல்கள்.**—நெடுங்காலம் கர்ணபரம்பரையாக வழங்கி வந்த ஹோமருடைய காவியம் பின்னால் கையெழுத்துப் பிரதி செய்யப்பெற்று, இப்பொழுது யூரோப்பிய பாஷைகள் ஒவ்வொன்றிலும் மொழி பெயர்க்கப்பட்டு வழங்கி வருகின்றது. ஷேக்ஸ்பியருடைய காலத்தில் எவரும் கவனிக்காத அவருடைய நாடகங்களைப் பின்னால் இங்கிலீஷ் புலவர்கள் எவ்வெவ்விடங்களில் தேடித் துருவிக் கண்டுபிடித்தார்கள். இந்தியாவில் படையெடுத்து வந்த முகம்மதியர் ஹிந்துமத நூல்களைத் தேடித் தீமடுத்து வந்த காலத்தில், இராமானுஜருடைய ஸ்ரீ பாஷியத்தை வேதாந்த தேசிகர் தமது உயிரையும் பொருட்டு செய்யாமல் காப்பாற்றி வைத்தனர். தொல்காப்பியர் இருந்த காலம் இறந்த காலமாகி

யும் அவரியற்றிய இலக்கணம், நிகழ்காலத்ததாய், இன்னும் எதிர்காலத்தையும் நோக்கியிருக்கின்ற தன்றோ? எங்களுக் குரியது எங்களுக் குரியது என்று அவரவர்கள் மன்றாடுவதற் கிடமான திருக்குறள், ஆயிரத்துத் தொள்ளாயிரம் வருடமாக எஞ்சியிருக்கின்றது. எத்தனையோ வருஷங்களுக்கு முன்னே, எத்தனையோ கவிகள், ஏதோ ஒவ்வொரு சந்தர்ப்பங்களில் சொல்லிய தனிப்பாடல்கள், உருமாறி யாயினும், இன்னும் உயிர்வைத் திருக்கின்றன. சேக்கிழார் பெரிய புராணத்தைப் பாடிக் கொடுத்தும், சைவப் புலவர்கள் சீவக சிந்தாமணியை மறந்துவிட வில்லை. எத்தனை ஆபத்துக்கள் நேரிட்டாலும், சத்துடைய பொருள்கள் எவ்விடத் தாயினும் உயிர் வைத்துக்கொண்டு உய்ந்திருக்கும். சத்தில்லாத செய்யுள்கள் பூவிலும் பிஞ்சிலும் அழிவுறும். உத்தம கவிகளுடைய ஊனுடைப் பழம் பாடல்கள் எவ்விடத்தி லாயினும் உயிர்பெற்றிருந்து உரிய காலத்தில் உலகத் துலாவுவன ஆகும். 'மலர வன்செய், வெற்றுடம்பு மாய்வனபோல் மாயா புகழ்கொண்டு, மற்றிவர் செய்யு முடம்பு.' இந்த உறுதியா லல்லவோ ஒளவையார் 'என்றும் கிழியாதென் பாட்டு' என்றனர். 'மனிதர்க்கு வயது நூறல்ல தில்லை;' அரிய நூல்களுக்கு ஆயுள் வரையறை இல்லை. காற்றும் மழையும் கலந்தடித்தாலும், அவை கரைவ தில்லை. காற்றும் நெருப்பும் கலந்து வீசினும், அவை கரிந்துபோவ தில்லை. எவ்வளவு காலம் ஆனாலும், அவை என்றும் சிரஞ்சீவிகளாகவே இருக்கும்.

**22. ஆதி கவிகள்-பிற்காலக் கவிகள்.**—தேவ சிருஷ்டியில் உலக வியற்கையும் இயற்கை விநோதங்களும் யாண்டும் எக்

காலத்தும் ஒருதன்மையனவே. ஆதலின், அவ்வத் தேயத்தில் ஆதி கவிகள் உலக வியற்கையையும் இயற்கை விநோதங்களையும் தங்கள் செய்யுளிற் பிரதிபிம்பித்துக் காட்டிவிட்டமையால், ஆதி கவிகளே சிறப்பெய்துகின்றனர்: பிற்காலத்துக் கவிகள் அங்ஙனம் சிறப்பெய்துவதற்கான அநுகூலங்கள் இல்லை எனச் சிலர் கருதுவர். காலத்துக்குக் காலம், மனிதருடைய பாவனை கருத்தின் போக்கு முதலியன, காலரீதிக் கேற்றவாறு, மாறுபட்டுச் செல்வதே, உலக சரித்திரத்தை அறிந்தவர்கள் உணர்ந்தபடி. தொழின் முயற்சிகளிலும், உலக நடவடிக்கைகளிலும், மதக் கோட்பாடுகளிலும், பரஸ்பர சம்பந்தங்களிலும், தமிழருடைய மனப்போக்கு, தமிழரசர் காலத்திருந்தவாறு முகம்மதிய அரசர் காலத்தில் இருந்ததில்லை. முகம்மதியர் காலத்தில் இருந்த மனப்போக்கு இப்பொழுது இங்கிலீஷ் அரசாட்சியில் எவ்வளவோ மாறுபட் டிருக்கின்றது. ஆகவே உலகவியற்கையும் இயற்கை விநோதங்களும் எக்காலத்திலும் ஒருதன்மையனவே யாயினும், அவற்றின் கூறுபாடுகளை நுணித்தறியும் நோக்கமும், அவற்றைக் கிரகிக்கும் விதமும், கற்பனைசக்தியால் அவற்றைக் கவியிலமைக்கிற விதப்பும், காலத்துக்குக் காலம் வேறுபட்டே வரும். உத்தம கவிகளின் செய்யுளை ஆராய்ந்து பார்த்தால், இவ்வுண்மை விளங்கும். ஆகவே எக்காலத்திலும் பாட்டில் அமைப்பதற்கு நவநவமான பாவங்களுக்கும் குறைவில்லை. அங்ஙனம் அவைகளை அறிந்து கவியில் அமைக்கும் கவிராயர்கள் அடையும் பெருமைக்கும் குறைவில்லை. தமிழில் பிற்றைநாட் புலவரில் சிவப்பிரகாசரும் மீனாட்சிசுந்தரம்பிள்ளையும் பிறர் சிலரும் உத்தம கவிகள் அல்லர் என்பார் உளரோ? ஐம்பெருங் காவியங்

களுக்குப் பிற்பட்டும் கம்பராமாயணம் அவற்றினும் மேன்மை அடையவில்லையா?

23. பொது ஜனங்களின் அங்கீகாரம். — உத்தரதுருவ முதல் தக்ஷிணதுருவம் வரையிலும் மானுஷீகம் ஒரு தன்மையதே ஆகும். ஆயினும் அவ்வத்தேயத்தின் இயற்கை யமைப்பினுக்கும் துரைத்தன ரீதிக்கும் தொழிற்றுறைகளுக்கும் இவற்றால் உருப்படும் நாகரிக நிலைமைக்கும் ஏற்றவாறாக மனித சாதிகளின் மனநிலை தேயத்துக்குத் தேயம் வேறுபடுகின்றது. அம்மனநிலைக்கேற்ப அவ்வத் தேயத்தினர் தங்களில் பொதுவாக ஒழுக்கம் என்பதே ஒழுக்கம், நன்மை என்பதே நன்மை, தீமை என்பதே தீமை. எத்தேயத்திலும் 'வெகுசன வாக்யம் கர்த்தவ்யம்.' ஒரு தேயத்து மஹாஜனங்கள் அனைவரும் ஒரு விஷயத்தில் ஒருங்கே கொள்ளும் கருத்தானது, தகுதியும்திட்பமும் உள்ளதாகவே இருக்கும். சிற்சிலர், ஒருதலைச்சார்பாலும் பொறாமையாலும் தத்தம் நலத்தைப் பாராட்டுவதாலும் அவ்விஷயத்தைப் பற்றிக்கொள்ளுதலான அபிப்பிராய பேதமானது, பொது ஜன அபிப்பிராயத்தை எவ்விதத்திலும் பாதிப்ப தில்லை. 'உயர வுயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா?' கட்சிபேதத்தை அனுசரித்தவர்களும், கட்சிபேதத்தை மேற்கொண்ட பத்திரிகைகளும், ஒரு நூலை உயர்த்திப் பேசுவதனாலும், தாழ்த்திப் பேசுவதனாலும், அந்நூல் சிரஞ்சீவியாக வாழும், அல்லது பிறந்த போதே அழிந்துபோகும் என்பதில்லை. பொது ஜனங்கள் அதன் திறத்திற் கொள்ளும் பொதுவான அபிப்பிராயமே அது நீடூழி வாழ்வதற்கும் நிமிஷ நேரத்தில் நிலைகுலைவதற்கும் கார

ணம் ஆகும். ஜனங்களுடைய அபிப்பிராயத்தில் ஒரு குறைவு உண்டு. அஃதாவது இன்ன காரணத்தால் இதனை அங்கீகரிக்கிறோம், இன்னகாரணத்தால் இதனைத் திரஸ்கரிக்கிறோம் என்று சொல்லிப் பொது ஜனங்கள் தங்கள் அபிப்பிராயத்தை வெளியிடுவ தில்லை. அதனைக் கண்டவளவில் உளதாகும் மனநிலையை அனுசரித்து, இது நமக்கு ஆகும் அல்லது இது நமக்கு ஆகாது என்பதே, பொது ஜனங்கள் சுருக்கமாகச் சொல்லிவிடுகிற தீர்மானம். இந்தத் தீர்மானம் தப்பெண்ணத்தினாலும் அறியாமையாலும் உண்டாயினும் உண்டாகலாம். எவ்விதத்தில் உண்டாவ தாயினும், பொது ஜனங்கள், தாங்கள் கொண்ட அபிப்பிராயத்தையே பிரமாணமாகக் கொள்வர். ஆயினும் பொது ஜனங்கள் பொறாமை முதலிய துர்க்குணம் கொண்டு தங்கள் அபிப்பிராயத்தை உரைத்தலான நிமித்தம் இல்லாமையால், அவர்களுடைய தீர்மானம் எவ்விடத்தும் எக்காலத்தும் அக்கிரமம் ஆவதில்லை. ஆகவே, பொதுஜன அங்கிகாரம் பெற்ற செய்யுள்கள் அவ்வத்தேயத்தில் நிலைபெற்று நிலவும் என்பது நிச்சயம்.

**24. உத்தம கவிகளால் உண்டாகும் நன்மை.**—ஒரு மருத்துவனுடைய கீர்த்தியைக் கேட்ட பிறகே ஒருவர் அவனிடம் நம்பிக்கை வைத்து அவனிடம் மருத்துவம் செய்துகொள்ளப் புகுவர். ஒரு வர்த்தகன் நல்ல சரக்குகளை நாணயமாக விற்பவன் என்றறிந்த பிறகே பலர் அவனிடம் சரக்குக் கொள்ளலாவர். ஒருவன் நட்புக்குரியான் என்பதை ஆராய்ந்தறிந்த பின்னரே அவனோடு தக்கவர் நட்புக் கொள்வர். பொருட்பொலிவு உள்

ளன என்றும், புலவர் போற்றத்தக்கன என்றும், பொதுஜன அங்கிகாரத்தால் காலாந்தரத்தில் கீர்த்தி பெற்ற பின்னரே, உத்தம கவிகளின் செய்யுள்களைக் கல்விமான்கள் பாராயணம் செய்வர். காலங்கண்ட கவிகளின் செய்யுள்க ளானவை, கல்வியும் கனவொழுக்கமும் உள்ள பெரியோர் வார்த்தை போலே, அவற்றைப் படிப்பவர் மனத்தைத் திருந்தப்பண்ணும். கல்லானது உளியால் அழகிய உருவெய்துமாறு போலே, மனமானது அவர்கள் செய்யுளால் உருவெய்தும். நன்றாக அட்ட அடிசில் சுவையும் உடலுக்குரமும் தருவது போலே, உத்தம காவியங்கள் இன்பமும் மனத்துக்கு வலிமையும் தருகின்றன. பரிசனவேதி பட்ட மாத்திரத்தில் இரும்பு தன்னியல்பு மாறிப் பொன்னாகும் என்ப. நல்ல கவிகளுடைய வாடை வீசின மாத்திரத்தில் புல்லொழுக்கம் அறவே மாறி நல்லொழுக்கம் உண்டாகும்.

# நட்பு.

# நட்பு.

பக்கம்.

1. தோற்றுவாய் .... .... .... .... .... .... 5
2. நட்பின் திறம் .... .... .... .... .... ,,
3. நன்னட்பும் தீநட்பும் .... .... .... .... .... 6
4. இயற்கை வாசனை—சேர்க்கை வாசனை .... .... 8
5. இளைஞரிணக்கம் .... .... .... .... .... 9
6. நட்பாராய்தல் .... .... .... .... .... 10
7. நட்பிற் பிழை பொறுத்தல் .... .... .... .... 11
8. நட்பால் விளையும் நன்மைகள் .... .... .... ,,
(க) நண்பனிடம் இன்ப துன்பங்களை உரைத்துக் கொள்வது .... .... .... .... .... 12
(உ) நண்பரிடம் உரைத்தலால் மனதிலுள்ள எண்ணங்கள் ஒழுங்கடைதல் .... .... 13
(ங) உசாத்துணை .... .... .... .... 14
(ச) ஒல்லும்வா யூன்றுநிலை .... .... .... 16
9. சினேகபங்கம் .... .... .... .... .... 18
10. நட்பாட்சி .... .... .... .... .... .... .... ,,

# நட்பு.

1. **தோற்றுவாய்.**—சிங்கம் புலி முதலிய சில வனவிலங் குகளே தனித்துறைவன. பலர் ஒருமிக்க வாழ்வதே மானுட வியற்கை. ஆன்ம விசாரம் செய்யும் யோகியர்க்கே ஏகாந்தம் இனியதாகும். ஏனை விசாரம் செய்வாரும் ஒருசார் ஏகாந் தத்தை நாடுவர். மனிதரோடு மனிதர் கூடிவாழ்வதே மானுட வியற்கை யாயினும், அன்பிலாவிடத்து அவ்வாழ்க்கையாற் பய னில்லை. நல்லாரோடு நட்புக் கொள்ளும் இயல்பிலான் தனித் தியங்கும் வனவிலங் கனையான். பலர் தம்மிடை அன்புடைய ராதல் கூடும். பலரும் தம்மிடை நட்புக் கோடல் இயலாது. ஒருவனைப் பலர் அறிந்திருத்தல் கூடும். அவரெல்லாம் அவ னுக்கு அறிமுக மானவர்களே யன்றி நண்பினரல்லர். தாம் அவர் என்னும் வேற்றுமை யில்லாத இருவரிடத்தே இயைவதா கும் நட்பென்பது. '(ஆரு மற்றதே தாரம்:) ஊரி லொருவனே தோழன்.'

2. **நட்பின் திறம்.** — ஒருவரோ டொருவர் நட்பாதற்குக் காரண மாவன;—அவர் ஒரு தேயத்த ராதலும், பலகாற் கண் டும் சொல்லாடியும் மருவுதலும், ஒத்த வுணர்ச்சிய ராதலு மாம். இவற்றுள் உணர்ச்சியொத்தலே சிறப் புடைத்து. தாம் அவர் என்னும் வேற்றுமை யின்றி உணர்ச்சியொத்த இருவர் நட்பே உள்ளும் புறமும் ஒத்ததாம்.

முகநக நட்பது நட்பன்று. நெஞ்சத்
தகநக நட்பது நட்பு.

இவர் ஒருவரை யொருவர்

இனையர் இவரெமக் கின்னம்யாம் என்று
புனையினும் புல்லென்னு நட்பு.

3. **நன்னட்பும் தீநட்பும்.**—நன்னட்பால் உளதாகும் இன்ப மும் தீநட்பால் உளதாகும் துன்பமும்

நுண்ணுணர்வி னாரொடு கூடி நுகர்வுடைமை
விண்ணுலகே யொக்கும் விழைவிற்றால்.—நுண்ணூல்
உணர்வில ராகிய ஊதிய மில்லார்ப்
புணர்தல் நிரயத்துள் ஒன்று

என்றவாறும். நன்னட்பால் உள்ளதாகும் இன்பம்

நவிறொறு நூனயம் போலும் பயிறொறும்
பண்புடை யாளர் தொடர்பு

என்றபடி, ஒருகாலைக் கொருகால் மிகுவதாகும். 'சற்சனருறவு சர்க்கரைப்பாகு.'

கனைகடல் தண்சேர்ப்ப! கற்றறிந்தார் கேண்மை
நுனியிற் கரும்புதின் றற்றே.—நுனிநீக்கித்
தூரிற்றின் றன்ன தகைத்தரோ பண்பிலா
ஈரமி லாளர் தொடர்பு.

தீநட்பால் உளதாகும் இன்பம் ஒருகாலைக் கொருகால் குறைவ தாகும். நன்னட்பு நாட்கு நாள் வளரும்: தீநட்பு நாட்கு நாள் தேய்த லாகும்.

நிறைநீர நீரவர் கேண்மை பிறை.மதிப்
பின்னீர பேதையார் நட்பு.

இங்ஙன மிருத்தலின் இணக்கமறிந் திணங்குதல் வேண்டும். ஆயினும் நன்னட்புக் குரியாரை அறிவது திரிபுடைத்து.

இற்பிறப் பெண்ணி இடைதிரியார் என்பதோர்
நற்புடைக் கொண்டமை யல்லது,—பொற்கேழ்
புனலொழுகப் புள்ளிரியும் பூங்குன்ற நாட!
மனமறியப் பட்டதொன் றன்று.

ஆகவே,

குணனும் குடிமையும் குற்றமும் குன்றா
இனனும் அறிந்தியாக்க நட்பு.

ஏனெனின்,

நாடாது நட்டலிற் கேடில்லை. நட்டபின்
வீடில்லை நட்பாள் பவர்க்கு.

அங்ஙனஞ் செய்வதில்,

குடிப்பிறந்து தன்கண் பழிநாணு வாரைக்
கொடுத்துங் கொளல்வேண்டும் நட்பு.

நட்பியல் பில்லாரை எவ்வாற்றானும் ஒழித்தல் வேண்டும். 'பாம்புக்குப் பால் வார்த்தாலும் படுவிஷத்தையே கொடுக்கும்.' ஆயினும், பாம்பின் விஷம் பல்லளவே யாகும்: துற்சனருக்கோ அங்கமுழுதும் விடமேயாம். ஆதலின் 'துஷ்டரைக் கண்டால் தூர விலகு'

மருவுக மாசற்ருர் கேண்மை. ஒன்றீத்தும்
ஒருவுக ஒப்பிலார் நட்பு.

யானைக்கு எல்லா நன்மைகளையும் செய்யும் பாகன், ஒரு குற்றம் செய்வானுயின், அது, அவன் செய்த நன்மை அவ்வளவையும் மறந்து, குற்றம் ஒன்றனையே நினைவில் வைத்திருந்து, அற்றம் பார்த்து அவனைக் கொல்லும். அங்ஙனமின்றி, நாயானது, தனக்கு அன்ன மிட்டவன் தன்னைக் கொல்லவரினும், அவன் செய்த நன்றியையே பாராட்டி, அவனைக் கண்டு வாலைக் குழைக்கும்.

யானை யனையவர் நண்பொரீஇ நாயனையார்
கேண்மை கெழீஇக் கொளல்வேண்டும்.

4. இயற்கை வாசனை—சேர்க்கை வாசனை.—தீயினத்தால் வரும் குற்றம் ஸஹவாஸ தோஷம் எனப்படும். நண்பனுக்கு நண்பன் பரிசனவேதி.

நிலத்தியல்பால் நீர்திரிந் தற்ருகும். மாந்தர்க்
கினத்தியல்ப தாகும் அறிவு.

அவரவருக்கு இயல்பில் உள்ள குணம் இயற்கை வாசனை என்றும், ஸஹவாஸத்தால் உண்டாகும் குணம் சேர்க்கை வாசனை என்றும் சொல்லப்படும். அவரவருடைய குணதோஷங்களை அவரவருடைய ஸஹவாஸத்தால் அறிதலாகும். ஒருவனை அறிய அவன் நண்பனே உரையாணி. அவரவர் தேடிக்கொள்ளும் நட்பும் அவரவர் இயற்கைக் கேற்றதாகவே இருக்கும். 'சிற்றெறும்பைச் சிற்றெறும்பும் கட்டெறும்பைக் கட்டெறும்பும் தேடும்.'

'சனத்தோடு சனஞ் சேரும்; சந்தனத்தோடு கர்ப்பூரஞ் சேரும்.' கிரீஸ் தேசத்திலிருந்த டையோனிஸியஸ் என்னும் கொடியோன் ப்ளேடோ என்னும் பெரியோரைத் தன்னிடம் அழைத்துவர ஆள் விடுத்தபோது, அவர் 'அறம் மறத்தினிடம் பொருந்தலின்று. டையொனிஸியஸ் இடத்தில் ப்ளேடோ செல்வது தகாது' என மறுமொழி கூறிவிட்டனராம். 'தாட்டோட்டக்காரனைக் கூடுவதிலும் தனியே இருப்பது நலம்.' நல்லோர் தீயோரை நாடார்: அவரை அணுகவும் அஞ்சுவர். இனம் தீதெனினும் நல்லறிவாளர் தம்மளவில் மனந்திரியார். இவரோடு மருவிய தீயினத்தர் பூவோடு சேர்ந்த நார் போல் மணம் பெறுவர். 'அறிவுடையாரை அடுத்தால் போதும்.'

5. **இளைஞரிணக்கம்.**—இளைஞர் இனத்தை இளைஞர் நாடுவது இயற்கை. நல்லொழுக்கம் இல்லாத இளைஞரிடத்தில் பாவம் குடிகொள்ளும்; நன்மை யாதொன்றும் இருப்பதில்லை. அவர்களோடு கூடின இளைஞர் அக்கூட்டுறவின் பலனைப் பெறு தொழியார். ஓட்டுவியாதிக்கும் உய்தலாம்; தீநட்புக் கொண்டவர்க்கு உய்வில்லை. 'அல்ப ஸஹவாஸம் ப்ராண ஸங்கடம்.' 'நல்லிணக்க மல்ல தல்லற் படுத்தும்.' தனிகரான இளைஞரோடு வறியரான இளைஞர் நட்புக்கொள்ளின், இச்சகம் பேசும் இழிந்த வழக்கம் மேலிடுவ தாகும். இளமையிற் பழக்கம் இடுகாடு மட்டில்: அப்பால் அதனைக் கடிய லாகாது. ஆகையால் பிள்ளைகளை இணக்கமறிந் திணக்குதலே பெற்றோர் மேற்கொள்ளத் தக்க முதன்மையான பாலசிக்ஷை. இளைஞர் இணக்கமறிந் திணங்காவிடத்து, உவாத்தியான், பஞ்சதந்திரத்

தில் தான் மித்திரபேதம் வல்லனாய், பிள்ளைகளை இரண்டாவது தந்திரத்தில் நன்கு பயிற்றல் வேண்டும். இது செய்யகில்லாதவன் உவாத்திமைத் தொழிற்கு அருகன் ஆகான்.

6. **நட்பாராய்தல்.**—ஒருவர் நமது நட்பை நாடியவிடத்து, நாம் யாதேனும் ஒரு தீக்கருமத்தில் அடியிடுவதாகப் போக்குக் காட்டுதல் வேண்டும். அங்ஙனம் செய்கையில், எவ்வாற்றானுயினும் அவர் அதினின்றும் நம்மை விலக்க முயல்கின்றனரா இலரா என்பதை யூகித்தறிக. இதனால் அவர் யாதொரு சுயநன்மையை நாடியே நமது நட்பை விரும்பினவரா அல்லரா என்பது புலப்படும். பிறகு, வெளியிட்டவிடத்தும் தீங்குவிளைத லில்லாத சில அந்தரங்க காரியங்களை அவரிடம் உணர்த்தி, அவற்றை அவர் வெளியிடுவதையும் இடாமையையும் அயலவரால் அறிந்துகொள்க. இன்னோரன்ன ஆராய்ச்சிகளே நட்பியல் புடையாரை அறிந்துகொள்வதற் கான உபாயங்கள். இஃதன்றியும், 'ஆபத்திலே அறியலாம் அருமை சிநேகிதனை.' தனக்கென்று வைத்து யாதொரு பயனையும் விரும்பாமல் நட்புக் கொள்பவன் உத்தமன்.

ஒன்றும் பெறுத லிலரெனினும் உற்றபெ ருஞ்செல் வத்தினர்பால்
சென்று கொளுநட் புடையரெனத் தேயஞ் சொலற்கே சிலர்சூழ்வார்.

இங்ஙனம் நட்பவன் மத்திமன். யாதொரு பயனை விரும்பி அதன்பொருட்டே நட்பவன் அதமனாவான்.

கடையாயார் நட்பிற் கமுகனையர். ஏனை
இடையாயார் தெங்கி னனையர்.—தலையாயார்
எண்ணரும் பெண்ணைபோன் றிட்டஞான் றிட்டதே
தொன்மை யுடையார் தொடர்பு.

இதனாலும் நட்பினர் திறம் இனிது விளங்கும்.

**7. நட்பிற் பிழை பொறுத்தல்.**—உண்மை நண்பர்கள் கருமமாயின செய்யுங்கால், நட்புரிமையாலே கேளாது செய்தலும், கெடும்வகை செய்தலும், தமக்கு வேண்டியன தாமே கோடலும் உண்டு. இங்ஙனம்

அழிவந்த செய்யினும் அன்பறார், அன்பின்
வழிவந்த கேண்மை யவர்.

அன்றியும்,

இறப்பவே தீய செயினுந்தன் னட்டார்
பொறுத்தல் தகுவதொன் றன்றோ?—நிறக்கோங்
குருவவண் டார்க்கும் உயர்வரை நாட!
ஒருவர் பொறையிருவர் நட்பு.

பொறுமை யின்றிப் பகைகொள்வதும் மீண்டும் கூடுவதும் ஆகின்ற நட்பு, நட்பினருடைய பெருமைக்குக் குறைவாகும். அந்நட்பிற்குத் திட்பமில்லை.

வேற்றுமை யின்றிக் கலந்திருவர் நட்டக்கால்
தேற்றா வொழுக்கம் ஒருவன்கண் உண்டாயின்,
ஆற்றுந் துணையும் பொறுக்க. பொறானாயின்,
தூற்றாதே தூர விடல்.

மேலும்,

இன்னா செய்தாரை ஒறுத்தல், அவர்நாண
நன்னயம் செய்து விடல்.

**8. நட்பால் விளையும் நன்மைகள்.**—வேற்றுமை யின்றி நண்பரது இன்ப துன்பங்களைத் தமவாகக் கொள்ளும் உணர்ச்சியொத்த உண்மை நண்பினர்க்குத் தமது நட்பால் விளையும் நன்மைகள் பலவுள.

*சீரியார் கேண்மை சிறந்த சிறப்பிற்றாய்*
*மாரிபோன் மாண்ட பயத்ததாம்.*

*அவற்றுட் சில வருமாறு:—*

(க) **நண்பனிடம் இன்ப துன்பங்களை உரைத்துக்கோள்வது.**—இன்ப துன்பங்கள் மனத்தில் அடைபட்டுக் கிடப்பதும் ஒரு பிணியாம். 'மனக்கவலை பலக்குறைவு.' நீரடைப்பு முதலிய பிணிகட்கு ஆயுள்வேதியர் பரிகாரம் கூறுவர். 'மனநோய்க்கு மருந்தில்லை.' மனத்தில் அடைபட் டிருக்கும் இன்ப துன்பங்களை வெளிப்படுப்பதே மனநோய்க்குப் பரமௌஷதம். ஆயினும் அடைபட் டிருக்கும் இன்ப துன்பங்களை மனத்தினின்றும் வெளியிடுதற்கு ஒரு போக்குவீடு வேண்டும். அங்ஙனம் போக்குவீ டாகின்றவன் நண்பனே. உண்மை நண்பனிடத்தில் உள்ளத்தி லுள்ளதை உரைத்துக்கொள்வதனால் நன்மைகள் இரண்டு உளவாம். துன்பம் பாதியாம். உவகை ஒன்றிரண்டாம். உண்மை நண்பனே, தாயப்பொருட்கு வழக்கிடாமல், தானாகவே துன்பத்தைச் சமமாகப் பங்கிட்டுக்கொள்ளும் பங்காளி: உள்ளக் கவலையை ஏற்றுக்கொள்ளும் சுமைதாங்கி. உலகில் 'ஒன்றிரண்டாம் வாணிக மில்லை.' உண்மை நண்பனே ஒருவகையை இரண்டாக்க வல்ல வணிகன்: அஷ்டசித்தியிலும் அடங்காத இவ்வற்புதத்தைச் செய்ய வல்ல சித்தன். இதுபற்றியே யன்றோ, வேந்தர் முதலியோர் சிலர், சிலரை மிக மேம்பட்ட பதவியில் வைத்துத் தம்மோடு ஒப்பக் கொள்வது. துரியோதனன், சூதன் மகனை நட்புக்

கொண்டு அங்கதேசத்துக்கு அதிபதி யாக்கினன். நந்தியென்னும் தொண்டைமான், ஒரு கம்பியனை அமைச்சனாக அமைத்துக்கொண்டான். பிசிராந்தை என்னும் புலவர் கோப்பெருஞ்சோழனுக்கு உயிர் போன்ற நட்பினராதல், தமிழில் பிரசித்தம். இன்னோரன்ன வரலாறுகள் உரோம சரித்திரத்தில் பலவுள. மனைவி மக்கள் முதலிய தொடர்புடையார் உளராகவும், அன்னோர் இங்ஙனம் செய்தற் காரணம், நட்பாலுளதாகும் நன்மை, சுற்றத் தொடர்புகளால் உளதாவதில்லை யென்பதே. 'நல்வினத்திலும் நட்பு வலிது.' 'உற்ற சிநேகன் உயிருக்கு அமிர்தம்.'

(உ) **நண்பரிடம் உரைத்தலால் மனதிலுள்ள எண்ணங்கள் ஒழுங்கடைதல்.** — முன்னும் பின்னுமாகச் சிந்தித்தும் தெளிவடையாமல் மலங்கிக் கலங்கி யிருக்கும் பல எண்ணங்கள் மனதில் நிறைந்த ஒருவன் அவற்றைப் பிறரிடம் வெளியிட்டால் மாத்திரமே, அறிவு தெளிவடைந்து நுட்பம் பெறும். அங்ஙனம் வெளியிடுங்கால், ஒவ்வோ ரெண்ணமும் ஒழுங்காகப் புறப்படும். எண்ணங்களை வார்த்தையில் அமைத்து உரைக்கும்போது, அவற்றின் நோக்கம் நன்கு புலப்படும். வெளியிடாமல் ஒருநாள் முழுவதும் ஓயாமல் சிந்தித்தவிடத்தும், அவை ஒழுங்காக உருப்படுவ தில்லை. அரை நாழிகை நேர மாயினும் அவற்றை ஒருவனிடத்தில் உரைக்கப் புகுந்தால், அறிவு தெளிவாக விளக்க மாகின்றது. கல்லானது தன்னளவில் கருக்குடைய தன்றே யாயினும், அதனிடம் தீட்டிய கத்தி கருக்கடையு மாறுபோல, ஒருவன் தன்னளவில் மந்தனே யாயினும்,

அவனிடம் உரைத்துக்கொண்ட எண்ணங்கள் ஒழுங்காக உரு வடையும். இத்தன்மை நட்பினரால் மாத்திரமே உளதாவ தொன்றன்று. நமது எண்ணங்களை, எவரும் இல்லை யாயின், மனத்தில் அலையவிடாமல், ஒரு கல்லுருவினிடத்தி லாயினும், ஒரு புல்லுருவினிடத்தி லாயினும், உரைத்துக்கொள்வதே உத்தமம். நட்பின ரிடத்தில் உரைத்துக்கொள்வது உத்தமோத் தமம். சித்திரப் பட்டாடைகளைச் சிப்பமாகக் கட்டிவைத்தால், அவற்றின் சீர் சிறப்புக்கள் விளங்கமாட்டா: விரித்துவைப்பின், கண்ட மாத்திரத்தில், அவற்றின் அருமை நன்கு விளங்கும். வெளியிடாத எண்ணங்கள், சிப்பமாகக் கட்டிவைத்த சித்திரத் துணிகளே.

(ஈ) உசாத்துணை.—நண்பனே எதற்கும் ஏற்றபெற்றி சூழ்ச்சி சொல்லுதற்கு உரியவன். தன் தொழிலைக் குறித்து ஒருவன் தானே சூழ்ந்திடல், தன்னைப் புகழ்ந்து முகமனுரைப்பா னொரு வனிடத்தில் சூழ்ச்சி செய்வதை ஒக்கும். ஒருவனுக்கு நண் பன் உரைக்கலான சூழ்ச்சி இருவகைத்து. ஒன்று ஒழுக்கத் தை நோக்கியது: மற்றொன்று காரியசித்தியைக் கருதியது. தனது ஒழுக்கம் தவறியவிடத்து அத்தவற்றினை நீக்கித் தன்னை ஒழுக்கத்தில் உய்க்கத் தக்கவன் நண்பனே. ஒருவன் தன் தவறுகளைத் தானே குறித்தறிந்து அவற்றைத் திருத்திக்கொள் வது வெறுப்புத் தரலான அதம பரிகார மாகும். அங்ஙனம் திருத்திக்கொள்ளும் பொருட்டு நன்னெறி விளக்கும் நீதிநூல் களை ஓதுவதும் மந்தமான பரிகாரமே. ஏனையரிடத்திற் கண்ட தவறுகளின் உதவியால் ஒருவன் தனது தவறுகளைத் திருத்திக்

கொள்வது, தனது சுற்றுச் சார்புகளோடு பொருந்துவ தில்லையா கக்கூடும். நண்பன் உரைக்கும் கழற்றுரையே உத்தம பரி காரமாகும். கழறியுரைக்கும் நண்பன் இன்மையால், உன்னத பதவியி லுள்ளார் சிலர், பெருந்தவ றிழைத்துச் சீருஞ்செல்வ மும் இழந்து இடர்ப்படுவது பிரத்தியக்ஷம். இவர்கள் கண்ண டியிற் கண்ட தங்கள் உருவை உடனே மறப்பவரை ஒப்பர்.

காரியசித்திக்கும் நண்பனுடைய சூழ்ச்சி இன்றியமையா தது. 'கணக்கன் கணக்கறிவான் தன் கணக்கைத் தானறியான்.' எல்லாப் பொருள்களையும் கண்டறிகின்ற கண், தன்னைத் தான் காண்பதில்லை. 'கண்ணின் குற்றம் கண்ணுக்குத் தெரியுமா?' தன் கருமத்தின் குற்ற நற்றங்கள் ஒருவனுக்குத் தோன்று. 'தீவட்டிக்காரனுக்குக் கண் தெரியாது.' ஆகையால், தான் தொடங்கும் கருமம் சித்தியாதற் பொருட்டு, ஒருவன் தன் நண்பனுடன் உசாவுதல் ஒருதலை.

சிலர் ஒரு தொழிலி னிமித்தம் ஒருவ னிடத்தும், மற்றொன் றினிமித்தம் மற்றொருவ னிடத்தும் சூழ்வர். இதனால் இரு வகைத் தீமை விளையும். உண்மையான நண்ப னல்லாதவன், தான் கருதியிருக்கும் சில கருமங்களுக்குச் சாதகமாகும் வித மாய்ச் சூழ்ச்சி கூறுவதல்லது, சூழ்ச்சி கேட்டவனுக்கே நன்மை விளையுமாறு கூறுவது அரிது. தனது உடற்கூறு அறியாத மருத்துவன் கொடுக்கும் மருந்தால், அதற்குரிய நோய் நீங்கி யும், உள்ளடங்கியிருந்த வேறு நோய் மேலெழுவ தாகி, உயிர்க் கிறுதி விளைவதும் உண்டு: அங்ஙனமே தனது சுற்றுச்சார்பு

[illegible] சந்நிதையுடன் [illegible] ஒரு [illegible] மையை உண்டா [illegible] விளைதலும் [illegible] உள்ளபடி [illegible] வினைக்கரு [illegible] கடைபோவதாகும். [illegible] உணர்ந்தவரான [illegible] உரைப்பனவற்றில் தன் [illegible] வல்லவன், நண்பனி டத்தில் மாத்திரமே சூழ்தல் வேண்டும் என்கிற நியதி யில்லை. தனக்கு ஆவனவற்றைத் தானே உய்த்தறியும் ஆற்ற லில்லாத வன், தனது கருமங்களையும் சுற்றச்சார்புகளையும் முற்றும் நன் குணர்ந்த நண்பனிடத்தே சூழ்தல் வேண்டும்.

(௬) ஒல்லும்வா யூன்றுநிலே.—தன் திறங்களை ஒருவன் பிறரிடம் அறிவிக்கத்தக்க சந்தர்ப்பம் நேர்தலாகும். அப்போது அவற்றைத் தானே எடுத்துரைப்பது தற்புகழ்ச்சியாகக் கொள் ளவும்படும். தன் காலைத் தானே கும்பிட்டுக் கொள்ளலாமா? தானே தன்னைப் புகழ்ந்துகொள்ளுதல் தகுதியன்று. பிறரி டத்தில் ஒன்றை விண்ணப்பித்துக்கொள்வதும், ஒரு பொருளை இரந்துகொள்வதும், ஒருவன் தானே செய்வது தகுதியாகக் காணப்படாது. தன்னளவிலே நாணுதலும் கூசுதலுமான இவற்றை நண்பன் செய்வது பொருந்தும். மைந்தனிடத்தில் தந்தை முறையாகவும், தந்தையிடத்தில் மைந்தன் முறையாக வும், தம்முனிடத்தில் தம்பி முறையாகவும், தம்பியிடத்தில்

...ன் முறையாகவு மன்றி, ஒருவன் வேறு முறையாக ருன் ...லும் செய்தலும் ஆகா. பகைவனிடத்தும் பகை பாராட் ...ல் தன் பெருமைக் கேற்றவாறு ஒன்றுரைத்தலும் செய் ...ும் ஆகா. தான் உத்தியோகிக்கும் உத்தியோக நிலைமை யில், தான் கருதிய சில பொது நன்மைகளை, அவ்வுத்தியோ கத்துக்குப் பாதக மின்றி, ஒருவன் தானே செய்ய இயலாத சந்தர்ப்பங்கள் உண்டு. நண்பனுயின், அவ்வத்திறத்துக் கியைக் தவாறு உரைத்தும் செய்தும், தனது எண்ணங்களை அநுகூல மாக முடித்தல் கூடும். மக்களுக்கு மணம்புரிதல், பொருளைப் பங்கிடுதல், கருதிய கரும முடித்தல் முதலியவற்றைத், தாம் விரும்பியவாறு நிறைவுறுத்து முன்னரே, பலர் ஆயுளின் எல் லையைக் கடந்துவிடுகின்றனர். ஆயினும், உண்மை நண்பன் ஒருவன் உளனுயின், தன் விருப்ப மெல்லாவற்றையும், தான் விரும்பிய விதமே, அவன் தலைக்கட்டுவான் எனக் கடைப் பிடித்திருக்கலாம். இங்ஙனம் நண்பனு லன்றி, ஒருவன் தானே செய்துகொள்ள லாகாத கருமங்கள், எத்தனையோ உள்ளன. எக் காலத்தும் எக்கருமத்திலும் உதவிசெய்யத் தக்கவன் நண்பனே.

> நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனின் கொட்பின்றி
> ஒல்லும்வாய் ஊன்று நிலை.

தாமவரென்னும் வேற்றுமை யின்மையால், உண்மை நண் பராற் பெறலான இவ்வகை நன்மைகட்குக் கங்குகரை யில்லை. இதனைப் பலபடப் பாரித்தல் வேண்டா. ஒரு காரியத்தை முடிக்கவில்லாதவன், உண்மை நண்பன் இல்லாவிடத்து, அதனை அகாரிய மென்றே விட்டொழிதற் பாலன்.

9. சிநேகபங்கம். — நட்பினர் இருவருள் ஒருவன், உயர் குலமமதை உத்தியோகமமதை வித்தியாமமதை திரவியமமதை முதலியன கொள்வானாயின், அவ்விருவரது நட்பின் திண்மை, நாட்குநாள் நெகிழ்ச்சி அடைவதாகும். ஜீவனோபாய நிமித்த மாக நட்பினர் வேறு வேறு தேயத்தராதலாலும், கட்சி வேறுபாடு சமயத்துவேஷம் முதலியவற்றாலும், சில சமயங்களில் சிநே கத்துக்குப் பங்கம் வருதலும் உண்டு. சத்தியுந்தவறுதல், சந் தேகாஸ்பதமான காரியஞ்செய்தல், சுயநலம் பாராட்டுதல், நய வஞ்சகம், முரட்டாட்டம், விசுவாசகாதகம் முதலியனவும், நட் பைக் கெடுத்தற்கான காரணங்கள். பொறாமை கொண்டும், சுயகாரிய சித்தியை நாடியும், சிலர், கோள் சொல்லியும் புறங்கூறியும், நட்பின ரிருவரிடையே மித்திரபேதம் செய்வ துண்டு. இங்ஙனம் சிநேகபங்க மாகின்றவைகளை எச்சரிக் கையாக ஓம்புதல் வேண்டும்.

10. நட்பாட்சி. — நண்பன் தீயொழுக்கத்திற் புக்கவிடத்து அதற்கு அனுகூலித்தலும், நண்பனுக்குச் சந்தோஷ முண் டாகும் பொருட்டுக் குற்றமான காரியங்களையும் கௌரவஹீன மான காரியங்களையும் செய்வதும், தனக்குச் சந்தோஷமுண் டாகும் பொருட்டு நண்பனை அவ்விதமான காரியங்களைச் செய்விப்பதும் இன்றி, ஒவ்வொருவனும் தன்தன் மரியாதை யைத் தான்தான் காத்துக்கொள்ளவேண்டும். உண்மையான நண்பனென்று தேர்ந்துகொண்டவ ரிடம், அடிக்கடி ஐயங்கொள் ளுதல் இன்றி, முழுநம்பிக்கை வைத்தல் வேண்டும். 'வினை விதைத்தவன் வினை யறுப்பான், தினை விதைத்தவன் தினை

யறுப்பான்.' வைஷம்யம் பாராட்டுகின்றவன் வைஷம்யம் பெறுவான். மைத்திரம் பாராட்டுவோன் மைத்திரம் பெறுவான். மானைக் காட்டி மானைப் பிடிப்பது போலே, நட்பைக் காட்டியே நட்பைப் பெறுதல் வேண்டும். நிறைக்கு நிறையாகக் கொள்வதல்லது, நட்பென்பது, கொடுப்பது குறையும் கொள்வது மிகையுமான வாணிகப்பொரு ளன்று. நண்பனுக்கு நண்பன் கண்ணாடி. நண்பனும் நண்பனும் பிம்பப் பிரதிபிம்பங்கள். பிரதிபிம்பத்தி லுள்ள தோஷம், கண்ணாடியாலு மாம், பிம்பத்தாலு மாம்.